இந்தியனாக இரு!

- ராஜேஷ்குமார்

மும்பை.
விக்டோரியா டெர்மினஸ்.
ராத்திரி பத்தரை மணி.

எட்டாவது பிளாட்பாரம். டெல்லி செல்லும் கேப் பிட்டல் சிட்டி எக்ஸ்ப்ரஸ் புறப்படும் கடைசி நிமிஷத்தில் இருந்தது. எக்ஸ்ப்ரஸ்ஸின் இருபத்திரண்டு பெட்டிகளும் க்ரீம் நிற பெயிண்ட்டில் பளபளத்துக் கொண்டிருந்தன. பிளாட்பார ஸ்பீக்கர்கள் ஹிந்தி, ஆங்கிலம், மராட்டி மூன்று மொழிகளிலும் அறிவிப்பு கொடுத்துக் கொண்டிருக்க -

அந்தப் பெண், பிளாட்பாரத்தில் பரவியிருந்த ஜனக் கும்பலை ஊடுருவிக்கொண்டு கடைசிப் பெட்டியில் நின்றிருந்த கார்டை நோக்கி ஓடினாள்.

ஆரஞ்சு நிறத்தில் சல்வார் கமீஸ் அணிந்து, கறுப்பு நிறத்தில் துப்பட்டா போட்டிருந்த அந்தப் பெண்ணியர்த்து வழிந்துகொண்டு கடைசிப் பெட்டிக்கு முன்பாய் வந்து நின்று மூச்சிரைத்தாள்.

பதற்றமாய் ஆங்கிலத்தில் சொன்னாள்.

"ஸார்...ட்ரெயின் புறப்பட்டுப் போக சிக்னல் கொடுக்க வேண்டாம்..."

கார்டு திகைத்தார்.

"சிக்னல் கொடுக்க வேண்டாமா...? ஏன்...?"

"இந்த ரயிலில் டைனமைட் வைக்கப்பட்டிருக்கிறது..."

கார்டு பெட்டியிலிருந்து பதற்றமாய்க் கீழே இறங்கினார்.

"என்னது டைனமைட்டா...?"

"எஸ்... வெரி பவர்ஃபுல் டைனமைட்.... பயணிகளை முதலில் ரயிலிலிருந்து இறக்கி தனியாய் ஐஸலேட் செய்துவிட்டு பாம் ஸ்க்வாடை வைத்து ரயில் முழுவதையும் சோதனை போட வேண்டும்..."

"இந்த ரயிலில் டைனமைட் வைக்கப்பட்டிருப்பது உனக்கு எப்படித் தெரியும்...?"

"நான் ஸ்டேஷனுக்குள் நுழையும்போது கூட்டம் அதிகமாக இருந்தது... கும்பல் சிறிது வெளியே போகட்டும் என்பதற்காக ஒரு டெலிபோன் பூத்துக்குப் பக்கத்தில் ஒதுங்கி நின்றேன்... பூத்தின் கதவு லேசாய்த் திறந்து கிடக்க, உள்ளே ஒருவன் சின்னச் சின்ன வாக்கியமாய் நிறுத்தி நிறுத்திப் பேசிக் கொண்டிருந்தான்..."

"என்ன பேசினான்...?"

"கேப்பிட்டல் சிட்டி எக்ஸ்ப்ரஸ் புறப்பட்டுப் போக சரியாய் இன்னும் ஐந்து நிமிடம் இருக்கிறது... இருபத்திரண்டு பெட்டிகளும் ஃபுல்... கிட்டத்தட்ட ஆயிரத்து ஐநூறு பயணிகள்... திட்டமிட்டபடி வெடித்தால் குறைந்தது ஆயிரம் பேர் பலியாவார்கள்..."

அந்தப் பெண் சொல்லிக் கொண்டிருக்கும்போதே - கார்டின் பேண்ட் பாக்கெட்டில் இருந்த கார்ட்லெஸ் டெலிபோன் சின்னதாய் அலறிக் கூப்பிட்டது.

கார்டு டெலிபோனை எடுத்தார்.

மறுமுனையில் எஞ்ஜின் டிரைவர் சந்திரமேனன் குரல் கொடுத்தார்.

"லால்ஜி...! உங்களுடைய சிக்னலுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன்... ரெண்டு நிமிஷம் தாமதமாகி விட்டது... ஏதாவது பிரச்னையா...?"

"ஆமாம்..."

"என்ன பிரச்னை...?"

"இந்த ரயிலில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருப்பதாக ஒரு பெண் வந்து சொல்லிக் கொண்டிருக்கிறாள்..."

"யார் அந்தப் பெண்...?"

"தெரியவில்லை... டெலிபோன் பூத் அருகே அந்தப் பெண் நின்று கொண்டிருந்தபோது யாரோ ஒருவன் டெலிபோனில் பேசிக்கொண்டிருந்தானாம்..."

"என்ன செய்யப் போகிறீர்கள்...?"

"அந்தப் பெண் சொல்லுவதை நம்புவதா, இல்லை

இக்னோர் செய்வதா என்று தெரியவில்லை..."

"இது இக்னோர் செய்யக்கூடிய விஷயம் கிடையாது... ரயிலில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருக்கிறது என்கிற செய்தி கிடைத்தபின்பும் அதைப் பொருட்படுத்தாமல் வண்டியை எடுப்பது சரியில்லை... உடனடியாய் ஸ்டேஷன் மாஸ்டருக்கும் ரயில்வே போலீஸ் பாம் ஸ்க்வார்டுக்கும் தகவல் கொடுத்துவிடுங்கள்... ரயில் இரண்டு, மூன்று மணி நேரம் தாமதமாய்க் கிளம்பிப் போனாலும் பரவாயில்லை... தகவல் கொடுத்த அந்தப் பெண் இப்போது எங்கே...?"

"எனக்குப் பக்கத்தில்தான் இருக்கிறாள்..."

"சரி... அந்தப் பெண்ணை ஸ்டேஷன் மாஸ்டர் அறைக்குக் கூட்டிக்கொண்டு வந்துவிடுங்கள்..."

கார்டு லால்ஜி தன் கையில் இருந்த போனை அணைத்துவிட்டு அந்தப் பெண்ணை ஏறிட்டார்.

"டெலிபோன் பூத்தில் பேசிக் கொண்டிருந்த நபர் யார்என்று உனக்குத் தெரியுமா...?"

"தெரியாது..."

"பக்கத்தில் இருந்த ஆட்களிடம் சொல்லி அவனை மடக்கியிருக்கலாமே...?"

"நான் விஷயத்தைக் கேட்டு திகைத்துநின்று கொண்டிருக்கும்போதே அவன் பூத் கதவைத் திறந்து கும்பலில் கலந்து மறைந்துவிட்டான்... அவனைத் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியில் நிமிஷங்களைக் கடத்திக் கொண்டிருந்தால் ரயில் புறப்பட்டுப் போய்விடும் என்பதால் அந்தமுயற்சியைக் கைவிட்டுவிட்டு ஓடோடி வந்தேன்..."

"சரி, வா...!"

ஸ்டேஷன்மாஸ்டர் அறையைநோக்கிப் போனார்கள். பிளாட்பார்த்தின் பாதி தூரத்தைக் கடப்பதற்குள் ஸ்டேஷன் மாஸ்டர் ஜென்ஸன் வேகவேகமாய் எதிரில் வந்தார்.

"லால்ஜி...! இங்கே என்ன பிரச்னை...? ஏன் சிக்னல் கொடுக்கவில்லை...?"

லால்ஜி விபரம் சொல்ல - ஸ்டேஷன் மாஸ்டர் ஜென்ஸன் அதிர்ச்சிகாட்டாமல் - 'உச்' கொட்டினார்.

"இது வெறும் புரளி... மாதத்துக்கு ஒரு தடவையாவது இப்படி வருவது வாடிக்கையாகிவிட்டது... ரயிலைமூன்று

மணி நேரம் நிற்க வைத்து பாம் ஸ்க்வாடை வைத்து ரயிலின் ஒவ்வொரு சதுர மில்லி மீட்டரையும் அலசிப் பார்த்தாலும் ஒன்றும் கிடைக்கப் போவதில்லை... இதை இக்னோர் பண்ணிவிடுவது பெட்டர்..."

அந்தப் பெண்குறுக்கிட்டாள்.

"ஸாரிஸார்... இது நான்காதால் கேட்ட செய்தி... வதந்தி கிடையாது... டெலிபோன் பூத்தில் அவன் பேசப் பேச ஒவ்வொரு வார்த்தையும் என்காதுகளில் தீர்க்கமாய் வந்து விழுந்தது... கிட்டத்தட்ட ஆயிரம் பேர் இறக்கக் கூடிய அளவுக்கு சக்தி வாய்ந்த வெடிகுண்டை ரயிலில் பொருத்தி இருக்கிறார்கள்..."

லால்ஜியும் ஸ்டேஷன்மாஸ்டரை ஏறிட்டார்.

"எஸ்மிஸ்டர் ஜென்ஸன்...! இது டெலிபோன்வழியாக வந்த அனானிமஸ்தகவல் கிடையாது... வெடிகுண்டோடு சம்பந்தப்பட்டவன் டெலிபோனில் யாருக்கோ பேச, அதை இந்தப் பெண்கேட்டிருக்கிறாள்... பாம்ஸ்க்வாடுக்கு தகவல் கொடுப்பதுதான் சரி... ரயில் மூன்று மணி நேரம் லேட்டாகப் புறப்பட்டாலும் பரவாயில்லை..."

லால்ஜி சொல்லிக் கொண்டிருக்கும்போதே ரயிலின் என்ஜின் டிரைவர்கள் சந்திரமேனனும், அவருடைய உதவியாளர் சிவசங்கரும் வந்தார்கள்.

சந்திரமேனன் லால்ஜியிடம் கேட்டார்.

"இந்தப் பெண்ணா...?"

"ஆமாம்..."

"உன்னுடைய பெயர் என்னம்மா...?"

"த்ரிஷா..."

"உனக்கு இதே ஊர்தானா...?"

"ஸார்...! என்னை விசாரிப்பது இருக்கட்டும்... நான் எங்கேயும் ஓடிப் போய்விட மாட்டேன்... முதலில் பாம் ஸ்க்வாடை வரவழைத்து ரயிலில் பொருத்தப்பட்டி ருக்கும் வெடிகுண்டை அப்புறப்படுத்துங்கள்... அதற்குப் பிறகு என்னைப் பற்றிய விபரங்களை சொல்கிறேன்..."

ஸ்டேஷன் மாஸ்டர் ஜென்ஸன் ஒரு கோபப் பெரு மூச்சோடு லால்ஜியிடம் இருந்த கார்ட்லெஸ் டெலி போனை வாங்கி ரயில்வேயின் 'ஆர்.பி.எஃப்' போலீஸ் செல்லைத்தொடர்புகொண்டார்.

அடுத்த இரண்டாவது நிமிஷம் - எட்டாவது பிளாட் பாரம் 'ஆர்.பி.எஃப்' போலீஸின்கண்ட்ரோலுக்கு வந்தது.

பாம் ஸ்க்வாட் இரண்டு பிரிவாய்ப் பிரிந்து மெட்டல் டைனமைட் டிடெக்ட்டர்களோடு கம்பார்ட் மெண்ட்களுக்குள் புகுந்தார்கள்.

பயணிகள் லக்கேஜ்களை விட்டுவிட்டு அடுத்த பிளாட்பாரத்துக்குப் போய் பீதி நிறைந்த முகங்களோடு நின்று கொள்ள - பாம் ஸ்க்வாட் மும்முரமாய் செயல் பட்டார்கள்.

பிளாட்பாரம் பரபரப்பாயிருக்க - தனியறையில் ரயில்வே போலீஸின் கமேண்டோ ஆபீசர் அஜய்வர்மா, தகவல் சொன்ன அந்தப் பெண்ணை கேள்விகளால் துருவி எடுத்துக் கொண்டிருந்தார்.

பார்வை அந்தப் பெண்ணின் முகத்தில் ஆணியடித் திருந்தது.

"உன்னுடைய பெயர் என்ன...?"

"த்ரிஷா ஸார்..."

"டேட்டிவ்...?"

"இதேமும்பைதான்..."

"ப்ராப்பர்...?"

"மாதுங்கா..."

"வேலை பார்க்கிறாயா...?"

"ஆமாம்..."

"எங்கே...?"

"ஃபர்ஸ்ட் ரேகம்ப்யூட்டர்கம்பெனியில்ப்ரொக்ராமரா இருக்கேன்..."

"கல்யாணம்...?"

"இன்னும் ஆகலை..."

"டெலிபோன் பூத்தில் நீ பார்த்த ஆள் எப்படி இருந்தான்...?"

"நடுத்தர வயது... மாநிறம்... லேசாய் எலும்பு தட்டிய முகம்... தாடி வைத்திருந்தான்... குர்தா பாணியில்ட்ரஸ்..."

"மறுபடியும் பார்க்க முடிந்தால் அவனை நீ கண்டு பிடித்துவிடுவாயா...?"

"கண்டிப்பாக..."

"டெலிபோன் பூத்திலிருந்து வெளிப்பட்டவன் கும்பலில் கலந்து எந்தப் பக்கமாகப் போனான்...?"

"பார்க்கமுடியவில்லை..."

அஜய்வர்மா த்ரிஷாவிடம் விசாரணையை முடித்துக் கொண்டு தனியறையினின்றும் வெளிப்பட்டு பிளாட்

பாரத்துக்கு வந்தார். பிளாட்பாரம் வெறிச்சோடிப் போயிருக்க - கேப்பிட்டல் சிட்டி எக்ஸ்ப்ரஸ் ரயிலின் எல்லா கம்பார்ட்மெண்ட்களிலும் போலீஸ் யூனிஃபார்ம் தெரிந்தது.

டாக் ட்ரெயினர்கள் போலீஸ் நாய்களை இயக்கிக் கொண்டிருந்தார்கள்

ஸ்டேஷன் மாஸ்டர் ஜென்ஸன், கார்டு லால்ஜி, என்ஜின் ட்ரைவர்கள் சந்திரமேனன், சிவசங்கர் எல்லோரும் அஜய்வர்மாவைச் சூழ்ந்துகொண்டார்கள்.

ஜென்ஸன் கேட்டார்.

"அந்தப் பெண் சொல்வது உண்மையாய் இருக்கு மென்று நினைக்கிறீர்களா ஸார்...?"

"நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்...?"

"அவள் பொய் சொல்வதாக நினைக்கிறேன்..."

"எப்படி...?"

"ரயிலில் வெடிகுண்டு வைத்தவன் உடனடியாய் அந்த இடத்தை விட்டுக் கடந்து வேறு எங்கேயாவது கூட்ட மில்லாத டெலிபோன் பூத்துக்குப் போய் போன் செய்து பேசுவானே தவிர, இப்படி ரயில்வே ஸ்டேஷனிலேயே பேசியிருக்க மாட்டான்..."

"அந்தப் பெண் த்ரிஷா ஏன் பொய் சொல்ல வேண்டும்...?"

"காரணத்தை அவளிடம்தான் கேட்க வேண்டும்..."

என்ஜின் டிரைவர் சந்திரமேனன் குறுக்கிட்டார்.

"'ஆர்.பி.எஃப்' போலீஸார் ரயிலையே சல்லடை போட்டு அரித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்... வெடிகுண்டு கிடைத்துவிட்டால் அவள் சொன்னது உண்மை... கிடைக்காவிட்டால் அவள் சொன்னது பொய்..."

கார்டு லால்ஜி கோபமாய்ச் சொன்னார்.

"வெடிகுண்டு கிடைக்காவிட்டால் அந்தப் பெண்ணைக் கைது செய்து ஸ்டேஷனுக்குக் கொண்டு போய் வைத்துக்கொண்டு தீவிர விசாரணை நடத்த வேண்டும்..."

"சோதனை நடந்து கொண்டிருக்கிறது... லெட் அஸ் வெயிட் அண்ட் ஸீ..."

வயர்லெஸ்களும் கார்ட்லெஸ் டெலிபோன்களும் பிளாட்பாரம் முழுக்க கரகரத்துக் கொண்டிருக்க - பாம்

ஸ்க்வாட் ஒவ்வொரு கம்பார்ட்மென்டையும் ஸ்கேன் செய்து உடனுக்குடன் 'டைனமைட் நாட் ஃபவுண்ட்' என்கிற ஒற்றை வரித் தகவலை அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

நேரம் கரைந்து கொண்டிருந்தது.

முழுதாய் முப்பது நிமிஷம்.

ஒரு போலீஸ் அதிகாரி, கமேன்டோ ஆபீசர் அஜய் வர்மாவுக்குப் பின் பக்கமாய் வந்து நின்று மெல்ல குரல் கொடுத்தார்.

"ஸார்...!"

திரும்பினார்.

"என்ன...?"

"தனியறையில் உட்கார வைக்கப்பட்டிருந்த அந்தப் பெண்திஷா..."

அஜய்வர்மா புருவங்களை உயர்த்தினார்.

"த்ரிஷாவுக்கு என்ன...?"

"அவளைக்காணோம்..."

சென்னை.

அந்தக் கலைக் கல்லூரி மதியவேளை. மர நிழல்களில் மாணவ-மாணவிகள் கூட்டம். காற்றில் கேலி, கிண்டல், சிரிப்பு.

"டேய் யுவன்...! இந்தக் கடி ஜோக்கைக் கேக்கறியா...?"

"வேண்டாண்டா... ஏற்கெனவே பயங்கரமா பிறாண்டி வெச்சிருக்கே..."

"ஒண்ணோ ஒண்ணு..."

"இனிமே தாங்க மாட்டேன்... கழுத்தைத் தொட்டுப் பாரு... எவ்ளோ ரத்தம்...?"

"இது ஒண்ணுமட்டும்தான்..."

"விடமாட்டியே நீ...? சரி சொல்லு..."

"பாகிஸ்தான் ராணுவ தளபதி முஷாரஃப் கிட்டே போய் உங்களுக்கு புத்தியே இல்லைன்னு சொன்னா அவர் கோபப்படவே மாட்டார்... ஏன் தெரியுமா...?"

"ஏன்...?"

"அவருக்குத்தான் தமிழ் தெரியாதே...? பாஷை புரிஞ்சாத்தானே கோபம் வரும்...?"

அந்தப் பக்கம் சைக்கிளில் வந்த மாணவன் குரல் கொடுத்தான்.

"டேய் யுவன்...! உன்னோட ஆளு துங்கபத்ரா உன்னை லைப்ரரி பக்கம் தேடிக்கிட்டு இருக்கா... நீ இங்கே உட்கார்ந்து வெட்டி அரட்டை அடிச்சுக்கிட்டு இருக்கியா...?"

"நிஜமாவா...?"

கேட்டுக்கொண்டே எழுந்த யுவன் ஆறடி உயரம். எம்.ஏ பாலிட்டிக்ஸில் இரண்டாவது வருஷம். மோவாயில் முள் முள்ளாய் ரோமம். முரட்டுத் துணியில் தைக்கப்பட்ட சட்டையும், ஜீன்ஸும் அவனுக்கு சரியாய்ப் பொருந்தியிருந்தன.

"நான் பொய்யா சொல்றேன்...? லைப்ரரி ஹால்ல உனக்காக வெயிட் பண்ணிட்டிருக்கா துங்கபத்ரா..."

"இதோ கிளம்பிட்டேன்..."

யுவன் குளிர் கண்ணாடியைப் பொருத்திக்கொண்டு மரத்தடி நிழலில் ஒய்வெடுத்துக்கொண்டிருந்த ஸ்ப்ளெண்டர் மேல் பாய்ந்தான்.

ஒரே உதையில் அது உயிர் பெற்றுக்கொள்ள - ஆக்சிலேட்டரை முறுக்கி விரட்டினான்.

ஐந்தே நிமிஷம்.

கல்லூரியின் கிழக்குக் கோடியில் இருந்த லைப்ரரி கட்டிடம் வந்தது. பைக்கை நிறுத்திவிட்டு உள்ளே ஓடினான் யுவன். படிகளில் ஏறிக்கொண்டிருக்கும்போதே துங்கபத்ரா எதிர்ப்பட்டாள்.

"ஹாய் துங்கா...!"

சற்றே கறுப்பாக இருந்தாலும் கண்ணுக்குலட்சணமாய் இருந்த அந்த துங்கபத்ரா, தன் இரண்டு கைகளையும் இடுப்பில் வைத்துக்கொண்டு முறைத்தாள்.

"எங்கடா போயிருந்தே...?"

துங்கபத்ராவுக்கு கோபம் வந்துவிட்டால் 'வாடா போடா'தான்.

"ஸாரி துங்கா...! பசங்கிட்டே பேசிட்டிருந்ததுல நேரம் போனதே தெரியலை..."

"டேய்! பொய் சொல்லாதே... எவளையாவது பார்த்து ஜொள்ளு விட்டுக்கிட்டு இருந்தியா...?"

"சேச்சே... உன்னைப் பார்த்த இந்தக் கண் இன்னொரு தியைப் பார்க்குமா...? நோ அட்மிஷன்..."

''இன்னிக்குக் காலையில் தேர்ட் இயர் பாட்னி சந்திரவதனத்துக்கிட்டே பேசிட்டிருந்தியே... அதுக் கென்ன அர்த்தம்...?''

''அய்யோ அபாண்டம்... ரெண்டு நாளா அவளைநான் பார்க்கவேஇல்லை...''

''சரி புலம்பாதே../ சும்மா சொன்னேன்... நீ எவளையாவது தப்பாப் பார்த்தின்னா அந்த நிமிஷமே நியூஸ் என்னோட காதுக்கு வந்து சேர்ந்துடும்... பை... தை... பை... கிளம்பலாமா?''

''எங்கே...?''

''பார்த்தியா... மறந்துட்டே...''

யுவன் பின்னந்தலையைக் கீறினான்.

''ஞாபகம் வரலையே...?''

''ஞாபகம் வரணும்... எப்படி மறந்தே...?''

''இரு... இரு... சொல்லிடறேன்...''

''சொல்லு...''

''சினிமா போறோம்... அலங்கார் நான்ஷோ...''

''உதைவிழும்...''

''சினிமா இல்லையா...? வேற என்ன...?''

''மகனே...! நீ எனக்கு சொல்லியாகணும்... இல்லை... ஒரு மாசத்துக்கு உன்னோட டூ... நான் இருக்கிற திசைப்பக்கம் எட்டிக்கூட பார்க்கக்கூடாது...''

''அய்யோ...! இரு சொல்லிடறேன்...''

''உனக்கு சரியா ஒரு நிமிஷம் டைம்... அதுக்குள்ளே நாம ரெண்டு பேரும் இப்ப எங்கே போறோம்னு நீ சொல்லியாகணும்... இல்லேன்னா உன்கூட டூவிட்டுட்டு நான்பாட்டுக்கு போய்ட்டே இருப்பேன்...''

''இரு... இரு... சொல்லிடறேன்...''

''ம்... சொல்லு...''

''ஏதாவது ஒரு ஹோட்டலுக்கு லஞ்ச் சாப்பிடப் போறோமா...?''

''சாப்பாட்டு ராமா...! ஒரு நாளைக்கு எத்தனைதடவை லஞ்ச் சாப்பிடுவே...?''

''வேற என்ன...?''

''இன்னும் அரை நிமிஷம்தான் பாக்கியிருக்கு...''

யுவன் நெற்றியைத் தட்டிக்கொண்டு யோசித்தான். துங்கபத்ரா அவனுடைய காதைப் பிடித்தாள்.

''ட்வெண்ட்டி செக்கண்ட்ஸ் மோர்...''

''அய்யோ...! ஞாபகம் வரலையே...?''

''இன்னும் பத்தே விநாடிகள்தான்...''

''இரு... இரு... ஞாபகம் வந்தாச்சு... யுனிவர்சிட்டி செண்டினரி ஹாலில் இன்னிக்குப் பேச்சுப் போட்டி... அந்தப் பேச்சுப் போட்டியில் நீ கலந்துக்கப்போறே...''

''சரியா சொன்னதால தப்பிச்சே...''

''பேச்சுப் போட்டி எத்தனை மணிக்கு...?''

''சரியா மூணு மணிக்கு...''

''இப்போ மணி ரெண்டரை...''

''கிளம்பலாமா...?''

''நான் ரெடி...''

இருவரும் பைக்குக்கு வந்தார்கள்.

யுவன் ஸ்ப்லெண்டரில் பரவி கிக்கரை உதைத்தான். துங்கபத்ரா பில்லியனில் பரவியுவனின் இடுப்பை வலது கையால் கோர்த்துக்கொண்டாள்.

பைக் கிளம்பியது.

''துங்கா...!''

''ம்...''

''இன்னும் கொஞ்சம் கெட்டியா பிடிச்சுக்கோயேன்...''

''டேய்...! ஜொள்ளு...''

''சரி சரி... உனக்கு எப்படிப் பிரியமோ அப்படிப் புச்சுக்கோ...''

''பைக்கைப் பார்த்து ஓட்டு...''

''ம்... ம்... பேச்சுப் போட்டிக்கு எல்லாம் ப்ரிப்பேர் பண்ணிட்டியா...?''

''எல்லாம் ப்ரிப்பேட்டா...! நாக்குநுனியில் இருக்கு...''

''பேச்சுப் போட்டிக்கு என்ன தலைப்பு கொடுத்திருக்காங்க...?''

''நேத்திக்கு சொன்னேனே...?''

''மறந்து போச்சு...''

''ஐஸ்வர்யாராயோட பிறந்த தேதி... சிம்ரனோட இடுப்பளவு... ரம்பாவோட அப்பா அம்மா பேரு... இதெல்லாம் உனக்கு நல்லா ஞாபகம் இருக்குமே...?''

''ஹி... ஹி...''

''சிரிக்காதே... உன்னோட மூளையில் நல்ல விஷயங்களுக்கு இடம் இருக்காது போலிருக்கே...?''

''திட்டாதே துங்கா...! தலைப்பு இப்போ எனக்கு ஞாபகத்துக்கு வந்துடுச்சு...''

"எங்கே சொல்லு பார்க்கலாம்...?"

"பேச்சுப் போட்டிக்கு மொத்தம் ரெண்டு தலைப்புகள் கொடுத்து இருக்காங்க... முதல் தலைப்பு... 'இந்த இந்தியாவில் பிறந்ததற்காக நான் பெருமைப் படுகிறேன்'..."

"ரெண்டாவது தலைப்பு...?"

"இந்த இந்தியாவில் பிறந்ததற்காக நான் வெட்கப் படுகிறேன்..."

"இந்த ரெண்டு தலைப்பில் நான் எந்தத் தலைப்பில் பேசப் போறேன்னு உனக்குத் தெரியுமா...?"

"தெரியுமே...!"

"என்ன தலைப்புன்னு சொல்லு பார்க்கலாம்...?"

"இந்த இந்தியாவில் பிறந்ததற்காக நான் பெருமைப் படுகிறேன்..."

துங்கபத்ரா முகம் இறுகிக்கொள்ள சொன்னாள்.

"இல்லை யுவன்...! நான் செலக்ட் பண்ணியிருக்கிறது ரெண்டாவது தலைப்பு..."

பைக்கின் வேகத்தைக் குறைத்து அவளைத் திரும்பிப் பார்த்தான் யுவன்.

"இந்த இந்தியாவில் பிறந்ததற்காக நான் வெட்கப் படுகிறேன்... இந்தத் தலைப்பையா செலக்ட் பண்ணியிருக்கே...?"

"ஆமா..."

"துங்கா...! நீ பொய் சொல்றே..."

"பொய்யா...?"

"ம்... நீ முதல் தலைப்பில்தானே பேசப் போறே...?"

"இல்லை யுவன்..! நிஜமாவே நான் ரெண்டாவது தலைப்பில்தான் பேசப் போறேன்..."

ஒரு விநாடி மவுனமாய் பைக் ஓடியது.

யுவன் கேட்டான்.

"உன்னோட பேர் என்ன...?"

"துங்கபத்ரா..."

"உனக்கு ஏன் அந்தப் பேர் வெச்சாங்க தெரியுமா...?"

"தெரியுமே..."

"ஏன்னு சொல்லு..."

"என்னோட குடும்பம் சுதந்திரப் போராட்டப் பின்னணி உள்ள குடும்பம்... அம்மாவும் அப்பாவும் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு ஜெயிலுக்குக்கூட போ

ருக்காங்க... இந்தியாவின் மேல அதீதமான பற்று... அதை வெளிக்காட்டற விதமா... இங்கே ஓடற புனிதமான நதிகளில் ஒன்றான துங்கபத்ரா என்கிற பேரை எனக்கு வெச்சிருக்காங்க..."

"இப்படிப்பட்ட பின்னணி உள்ள நீ... ஜஸ்ட் போட்டிக்காகக்கூட இந்தியாவை வெறுத்துப் பேச மாட்டேன்னுதான் நான் நினைச்சேன்..."

துங்கபத்ரா ஒரு வெறுமைப் புன்னகை பூத்தாள்.

"யூ ஆர் ராங் யுவன்...! உண்மையில் இப்ப இருக்கிற இந்தியாவை நான் தீவிரமா வெறுக்கிறேன்... போட்டிக்காக இந்தத் தலைப்பை நான் தேர்ந்து எடுக்கலை... என்னோட மனசுக்குள்ளே இருக்கிற குமுறலை பப்ளிக்கா கொட்டறதுக்கு வாய்ப்பு கிடைச்சதேங்கற சந்தோஷத்தோட அந்தத் தலைப்பை நான் தேர்ந்து எடுத்திருக்கேன்..."

ஒரு விநாடி ரியர் வியூ மிரரில் தெரிந்த அவள் முகத்தைப் பார்த்துவிட்டு திடுக்கிட்டான் யுவன்.

"துங்கா...! என்ன இதைச் சொல்றப்பவே உன் மூஞ்சியெல்லாம் இப்படிச் சிவந்து போச்சு...?"

"அந்த அளவுக்கு வெறுப்பும் கோபமும் இந்தியா மேல எனக்கு இருக்கு..."

"உன்னோட கோபத்துக்கு என்ன காரணம்...?"

"பேச்சுப் போட்டியில் நான் பட்டியல் போடப் போறேன்... அதைக் கேட்டா... நீயும் என்னோட கட்சியில் சேர்ந்துடுவே... இந்தியாவில் பிறந்ததுக்காக நான் ஏன் வெட்கப்படுறேன்னு மேடையில் சொல்றேன்..."

3

கமேண்டோ ஆபீசர் அஜய்வர்மா அதிர்ச்சியோடு அந்த அதிகாரியைத் திரும்பிப் பார்த்தார்.

"என்ன சொல்றீங்க...?"

"அறைக்குள் இருந்த அந்தப் பெண் தீவிரவாதிகளைக் காணோம் சார்..."

அவர் சொன்னதைக் காதில் வாங்கிய ஸ்டேஷன் மாஸ்டர் ஜென்ஸன்... கார்டு லால்ஜி... என்ஜின் டிரைவர்கள் சந்திரமேனன், சிவசங்கர்... அத்தனை பேருமே அதிர்ச்சியோடு திரும்பினார்கள்.

ஜென்ஸன்கோபத்தோடு சொன்னார்.

"அவள்பொய்சொல்லுகிறாள்என்றுநான்அப்போதே சொன்னேன்..."

லால்ஜி நிதானமானகுரலில்கேட்டார்.

"அறை வாசலில் நாம் அத்தனை பேரும் நின்று கொண்டிருக்கிறோம்... அவள் எப்படி இந்த அறையை விட்டுத்தப்பிக்கமுடியும்...?"

ஜென்சன் கோபமும் எளனமும் சரியான விகிதத்தில் கலந்திருக்கச் சொன்னார்.

"நம் கவனம் முழுவதும் ரயிலின் மீது அல்லவா இருக்கிறது...? பாம் ஸ்க்வார்ட் ஆட்களிடம் டைனமைட் கிடைத்ததா என்பதில்தானே தம் கவனம் முழுவதும் பதிந்திருக்கிறது...?"

என்ஜின் டிரைவர் சிவசங்கர் ஜென்ஸனின் வாக்கியத்தை ஆமோதித்தார்.

"அவர் சொல்வது சரிதான்...நம்கவனம் சிதறியிருக்கும் சமயம் பார்த்து அவள்தப்பிப் போயிருக்க வேண்டும்..."

என்ஜின் டிரைவர் சந்திரமேனன் கேட்டார்.

"அப்படியானால் ரயிலில் டைனமைட் இருப்பதாக அவள் சொன்னது பொய்யானதகவலா...?"

"பின்னே...?"

"இதனால் என்னபயன்...?"

"நமக்கு வரும் அநாமிமஸ் போன் தகவல்களைப் போலத்தான் இதுவும்... பொறுப்பற்ற குறும்புத்தனம்... ரயிலைத் தாமதப்படுத்துவது இந்த மாதிரி ஆட்களின் வாடிக்கை..."

கார்டுலால்ஜி சொன்னார்.

"போனில் பொய்த் தகவல் சொல்வதும்... சொல்லி விட்டுத் தப்பிப்பதும் கலபம்... ஆனால் நேரில் வந்து இவ்வளவு ரிஸ்க் எடுத்திருப்பதுதான் என்னை யோசிக்க வைக்கிறது..."

இவர்களின் விவாதம் தொடர்ந்து கொண்டிருக்கும் போதே அஜய்வர்மா வேகமாய் அந்த அறைக்குள் சென்றிருந்தார்.

அவளை உட்கார வைக்கப்பட்டிருந்த ஸ்டீல் சேர் காலியாக இருந்தது.

அந்த சேரிலிருந்து ஐந்தடி தள்ளி வந்தால் கதவு.

ஒரு சின்ன பூட்டான் அடித்தால் சட்டென்று வெளியே

போய்விடலாம்.

அஜய்வர்மா தன்னைத்தானே நொந்து கொண்டார்.

'எப்படி அவளை நம்பினோம்...?'

'அவள்எங்கேயும்தப்பிஓடிவிடமாட்டாள்என்றுஎப்படி நம்பினோம்...?'

'அவளைக் கண்காணிக்க ஒரு கான்ஸ்டபிளை நியமித்திருக்கவேண்டும்...'

கவலையாய் யோசித்துக்கொண்டே பெரிய சிக்னல் போர்டுகளுக்குப்பின்னால்சென்றவர்-சட்டெனநின்றார்.

அவர் காதுகள் கூர்மையாகின.

வேகமாய் வெளியே வந்தார்.

"ஜென்ஸன்..!ஜென்ஸன்...!"

ஸ்டேஷன்மாஸ்டர்தொப்பையைத்தூக்கிக்கொண்டு ஓடி வந்தார்.

"எஸ்மிஸ்டர்அஜய்வர்மா...!"

"அந்த சிக்னல் போர்டுக்குப் பின்னே ஒரு கதவு இருக்கிறதே...?"

"அது அட்டாச்டு டாய்லட் அண்ட்பாத்ரூம்..."

"அந்தக் கதவு சாத்தியிருக்கிறது... உள்ளே தண்ணீர் விழும் சப்தம் கேட்கிறது... த்ரிஷா பாத்ரூமுக்குள் போயிருக்கிறாள்என்றுநினைக்கிறேன்..."

அவர் சொல்லிக்கொண்டிருக்கும்போதே அந்தக்கதவு திறக்கும் சப்தம் கேட்டது.

ஈரக் கைகளைத் துடைத்தபடியே பிரம்மாண்டமான சிக்னல் போர்டுக்குப் பின்னே இருந்து த்ரிஷா வெளிப்பட்டாள்.

"இன்ஸ்பெக்டர்...! டைனமைட் கிடைத்து விட்டதா...?"

அவர் பெருமூச்சுவிட்டார்.

"இன்னும் கிடைக்கவில்லை... அதற்குள் உன்னைக் காணவில்லை என்று இங்கே ஒரு பெரிய களேபரமே நடந்துவிட்டது..."

த்ரிஷாவின் புருவங்கள் நெளித்தன.

"என்னசொல்கிறீர்கள்..?"

அஜய்வர்மா நடந்து முடிந்த சில நிமிஷப் பரபரப்பை அவளிடம் சொன்னார்.

"என்னைநம்புங்கள்இன்ஸ்பெக்டர்...!நான்எங்கேயும் போய்விடமாட்டேன்... ஒரு பயங்கரத் தகவலைப்

போலீசிடம் சொல்லி இருக்கிறேன்... ஒரு வேகத்தில் இதைச் செய்துவிட்டேன்... ஆனால் உட்கார்ந்து அதை நினைத்துப் பார்க்கிறபோது பயத்தில் அடிவயிறெல்லாம் கலங்கிப் போகிறது... இரண்டு மூன்று முறை நான் பாத்ரூமிற்குள் போய்வந்துவிட்டேன்..."

"சொல்லிவிட்டுப் போயிருக்கலாமே...?"

"இங்கே எல்லாரும் ஆண்களாய் இருக்கிறீர்கள்... இதைப் போய் யாரிடம் சொல்வது...? எழுந்து இந்த அறையை சுற்றிப் பார்த்தேன்...அந்தசிக்னல் போடுக்குப் பின்னே பாத்ரூம் கதவு பாதி திறந்த நிலையில் தெரிந்தது..."

அவன் சொல்லிக் கொண்டிருந்தபோது - இன்னொரு போலீஸ் அதிகாரி வேகமாய் வந்தார்.

"ஸார்...!"

"என்ன...?"

"ஸ்டைனமைட் கிடைத்துவிட்டது..."

வேகமாய்த் திரும்பினார் அஜய்வர்மா.

அவர் முகத்தில் பரபரப்பு தொற்றிக் கொண்டது. அந்த அதிகாரியோடு அவசர நடையிட்டபடி பிளாட்பாரத்துக்கு வந்தார்.

நீளமான உடம்போடு தண்டவாளத்தில் உட்கார்ந்திருந்த ரயிலை ஒட்டி வேகவேகமாய் தேடினார்கள்.

ரயிலின் மையத்தில் இருந்த அந்தக் கம்பார்ட்மெண்டின் அருகே பாம் ஸ்க்வார்ட்கள் மொய்த்திருந்தார்கள்.

அஜய்வர்மா கேட்டார்.

"இந்த கம்பார்ட்மெண்ட்டிலா...?"

"எஸ் ஸார்..."

"எங்கே பொருத்தியிருக்கிறார்கள்...?"

"கம்பார்ட்மெண்ட்டுக்கு அடியில்..."

"டைனமைட்டை டீஆக்ட்டிவேட் பண்ணியாயிற்றா...?"

"இரண்டு கமேண்டோக்கள் அந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள் ஸார்..."

கம்பார்ட்மெண்ட்டின் ஒருகதவுவழியேபுகுந்து அடுத்த கதவில் வெளிப்பட்டு தண்டவாளத்தில் குதித்தார்கள்.

கீழேகுனிந்து பார்க்க - வியர்த்தமுகங்களோடு இரண்டு கமேண்டோக்கள் படு நிதானமாக செயல்பட்டுக்

கொண்டிருந்தார்கள்.

கம்பார்ட்மெண்ட்டின் அடிபாகத்தில் கறுப்பு வயர்களோடு அந்த டைனமைட் மன்ஒட்டிக்கிடந்தது.

அஜய்வர்மா கேட்டார்.

"என்ன வகை டைனமைட்...?"

போராடிக்கொண்டிருந்த கமேண்டோக்களில் ஒருவர் தனது பணியில் கவனம் பிசகாமல் அதைத் தொடர்ந்து கொண்டே அஜய்வர்மாவுக்கு பதிலளித்தார்.

"ஆர்டிஎக்ஸ் வகை போலத் தெரிகிறதுஸார்..."

"சக்தி வாய்ந்ததா...?"

"மிகவும் கனமாகவே உள்ளது... ஆகவே சக்தி மிகுந்ததாகத்தான் இருக்க வேண்டும்..."

"க்ளாக் பொருத்தப்பட்டுள்ளதா?"

"ஆமாம்... செட் பண்ணப்பட்டிருக்கும் நேரம் தெரியவில்லை... ஆனால் பேட்டரி பாக்சைக் கண்டுபிடித்து விட்டோம்..."

"வயர்களை டிஸ்கனெக்ட் பண்ணிவிடுங்கள்..."

"எஸ் ஸார்... அதைத்தான் செய்து கொண்டிருக்கிறோம்..."

கையடக்கமான கட்டிங்பிளேயரின் உதவியோடு ஒரிரு வயர்களை இணம் கண்டு துண்டித்தபின்பு - வியர்வையை வழித்துக்கொண்டே புன்னகைத்தார்கள்.

"ஓவர் ஸார்... அபாயக்கட்டத்தைத் தாண்டி விட்டோம்..."

அடுத்த சில நிமிஷங்களில் அந்த டைனமைட் கம்பார்ட்மெண்ட்டின் உடம்பிலிருந்து பிரித்தெடுக்கப் பட்டது.

அத்தனைநேரமாய் கோபமாய்த்திட்டிக் கொண்டிருந்த ஜென்ஸனும், லால்ஜியும்கூட இந்தநிமிஷம் த்ரிஷாவைப் பாராட்டினார்கள்.

ஜென்ஸன் அங்கே வந்து சேர்ந்த அஜய்வர்மாவிடம் கேட்டார்.

"இனிமேல் பிரச்னை இல்லையே...?"

"இல்லை... மூன்றாவது டைமராக அத்தனை கம்பார்ட்மெண்ட்டையும் பாம்டிடெக்டரைக் கொண்டு அலசியாயிற்று... பொருத்தப்பட்டிருந்த டைனமைட்டையும் அகற்றியாயிற்று..."

"அப்படியானால் ரயில் புறப்படலாம்...?"

"எஸ்..."

"லால்ஜி...!"

லால்ஜி தலையாட்டினார்.

"நாங்கள் கிளம்புகிறோம்..."

சொல்லிக்கொண்டே அவர் என்ஜின் டிரைவர்கள் சந்திரமேனனையும் சிவசங்கரையும் பார்க்க - அவர்கள் இருவரும் தலையசைத்துவிட்டு என்ஜினை நோக்கி நகர்ந்தார்கள்.

பயணிகளை ரயிலில் ஏறிக்கொள்ளச் சொல்லி அறிவிப்பு வெளியானது.

பயந்த முகங்களோடு பயணிகள் தத்தம் பெட்டிகளைத் தஞ்சம் அடைந்தார்கள்.

சந்திரமேனன் சொன்னார்.

"சிவசங்கர்...! நினைத்துப் பார்த்தாலே உடம்பெல்லாம் உதறுகிறது... அந்தப் பெண் மட்டும் தகவல் சொல்லியிருக்காவிட்டால்...?"

சிவசங்கர் புன்னகைத்தார்.

"இந்நேரம் நாம் உயிருள்ள மனிதர்களாய் இருக்க மாட்டோம்... ஆயிரத்திற்கும் மேற்பட்ட சதைச் சிதறல்களாக மாறியிருப்போம்..."

அவர்கள் என்ஜினை அடைந்து உள்ளே ஏறிக் கொள்ளவும் - கார்ட்லெஸ் போன் முணுமுணுக்கவும் சரியாய் இருந்தது.

சந்திரமேனன் கார்ட்லெஸ்ஸை உயிர்ப்பித்தார்.

"ஹலோ..."

"நான் லால்ஜி... என்ஜின் ரூமுக்கு வந்து விட்டீர்களா...?"

"வந்துவிட்டோம்..."

"கிளம்பலாம்..."

"ஒகே ஸார்..."

இருவரும் என்ஜினை இயக்க ஆரம்பிக்க - ஒரு முறை இரைச்சலாய்ப் பிளிறிவிட்டு - தட்டடக்தட்டடக்கென்று ரயில் நகர ஆரம்பித்தது.

சொற்ப நிமிஷங்களுக்குப் பின் ரயில் பெரும் இரைச்சலோடு அந்த ஆற்றுப் பாலத்தைக் கடக்க ஆரம்பித்த போது - சிவசங்கர் புன்னகையோடு கேட்டார்.

"கொஞ்ச நேரத்துக்கு முன்னால் என்ன சொன்னீர்கள் சந்திரமேனன்...?"

"என்ன சொன்னேன்...?"

"அந்தப் பெண் த்ரிஷாவைப் பாராட்டி என்னவோ சொன்னீர்களே...?"

"அவள்மட்டும் இன்ஃபார்ம் பண்ணியிருக்காவிட்டால் டைனமைட் ரிமூவ் செய்யப்பட்டிருக்காது... நாம் வெடித்துச் சிதறியிருப்போம் என்று சொன்னேன்..."

"டைனமைட் ரயிலிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது என்று நினைக்கிறீர்களா சந்திரமேனன்...?"

"ஆமாம்... நாம்தான் பார்த்தோமே...?"

"நீங்கள் நினைப்பது தவறு... இந்த ரயிலில் மொத்தம் இரண்டு டைனமைட்கள் இருந்தன... இரண்டில் ஒன்றே ஒன்று மட்டும்தான் பாம் ஸ்க்வார்ட் ஆட்களால் கண்டு பிடிக்கப்பட்டு முடக்கப்பட்டது... மற்றொன்று இந்த ரயிலுடன் இந்த விநாடி வந்து கொண்டிருக்கிறது..."

சந்திரமேனன் குழப்பமும் திகிலும் அப்பிக்கொண்ட முகத்தோடு சிவசங்கரைப் பார்த்தார்.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள் சிவசங்கர்...?"

சிவசங்கர் சிரித்தார்.

"இந்த ரயிலில் ஒரு டைனமைட் உயிருடன் இருக்கிறது என்று சொன்னேன்..."

"உங்களுக்கு எப்படித் தெரியும்...?"

"அதை வைத்திருப்பதே நான்தானே...?"

"நீ... நீங்களா...? ஜோக் அடிக்கிறீர்களா...?"

"ஜோக் அடிக்கவில்லை... பணக்காரனாக ஆசைப் பட்டேன்... அதற்கான வாய்ப்பு சிலர் மூலமாக வந்தது... முதலில் பயமாகத்தான் இருந்தது... ஆனால் அதிர்ஷ்ட தேவதை இப்படி யெல்லாம்தான் வந்து கதவைத் தட்டுவாள்... பயந்து கொண்டிருந்தால் பணக்காரனாக முடியாது என்பதை உணர்ந்து கொண்டேன்... ரயில் கம்பார்ட்மென்ட்டில் டைனமைட் பொருத்த தீவிர வாதிகளுக்கு நான் உதவி செய்தேன்..."

"அதைத்தான் ரிமூவ் செய்துவிட்டார்களே...?"

"அப்படி ஒரு வேளை நேர்ந்தால் இன்னொரு டைனமைட்டை வெடிக்க வைக்க வேண்டியது என் பொறுப்பு... மொத்தத்தில் இந்த ஆப்ரேஷன் சக்ஸஸ் ஆக வேண்டும்... இன்னொரு டைனமைட் இதோ இருதான்..."

சொல்லிக்கொண்டே தன் கையில் கட்டியிருந்த கனமான வாட்சைக் கழற்றிக் கீழே வைத்தார்.

"இ... இதுவா...?"

"ஆமாம்... மூன்றிலிருந்து நாலும் இதன்மீது இன்னொரு பெரிய... இந்த டைனமைட் வாட்ச்சினால் கிட்டத்தட்ட ஆயிரம் பேரின் உயிரைப் பறிக்க முடியும்..."

சந்திரமேனனுக்கு சிவசங்கர் ஜோக் அடிக்கிறாரா... நிஜத்தைப் பேசுகிறாரா என்று புரியவில்லை.

சிரிக்க முயன்றார்.

"சிவசங்கர்...! நீங்கள் பொழுதுபோவதற்காக சும்மா விளையாட்டு காட்டுகிறீர்கள்... நீங்கள் சொல்கிற மாதிரியே இந்த வாட்ச் ஒரு சக்தி வாய்ந்த டைனமைட் என்றே வைத்துக் கொள்வோம்... இது வெடித்தால் நீங்களும்தானே பலி ஆகிவிடுவீர்கள்...? அப்புறம் நீங்கள் எப்படிப் பணக்காரனாக முடியும்...?"

சிவசங்கர் சிரித்தார்.

"நிமுவ் செய்யப்பட்ட டைனமைட் சரியாய் இந்தப் பாலத்தைக் கடக்கையில் வெடிக்கிற மாதிரி செட் பண்ணப்பட்டிருந்தது... இப்போது நாம் பாலத்தைக் கடந்து கொண்டிருக்கிறோம்... வாட்சுடன் இணைந்த இந்த டைனமைட்டை வெடிக்க வைத்துவிட்டு கீழே குதித்துவிடப் போகிறேன்... தான் உயிர்துப்பிவிடுவேன்... உங்களோடு சேர்ந்து வெடி விபத்தில் நானும் உயிரிழந்ததாக போலீஸ் தப்புக் கணக்குப் போட்டுக் கொள்ளும்..."

சந்திரமேனன் பாதி நம்பிக்கையும் பாதி அவநம்பிக்கையுமாக சிவசங்கரைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே -

வாட்சில் ஏதோ ஒரு சிறிய பொத்தானை முடுக்கிவிட்டு விட்டு -

ஓடும் ரயிலிலிருந்து 'விர்ர்' என்று ஆற்றுக்குள் பாய்ந்தார் சிவசங்கர்.

அவர் தண்ணீரைத் தொடும் நிமிஷம் - ரயில் தீப்பிழம்பாய் வெடித்துச் சிதற ஆரம்பித்தது.

4

யூனிவர்சிட்டி செண்டினரி ஹால்.

கலர் பேப்பர்களும் பேனர்களும் படபடத்தன. மேடையில் சிவப்பு வெல்வெட் துணியில் மஞ்சள் எழுத்துக்கள் பளிச் என்று தெரிந்தன.

பேச்சுப் போட்டி

இந்தியாவில் பிறந்ததற்காக நான் பெருமைப் படுகிறேன்...

இந்தியாவில் பிறந்ததற்காக நான் வெட்கப் படுகிறேன்...

ஸ்பான்சர்ட் பை நியூ டைமன்ஷன் ஸ்டாட்டிஸ்டிக்ஸ் ப்ரைவேட் லிமிடெட்...

இன்ட்டர் காலேஜ் போட்டி என்பதால் ஆர்வமுள்ள ஏராளமான மாணவ மாணவிகள் ஆங்காங்கே கொத்துக் கொத்தாய்த் தெரிந்தார்கள்.

மேடையில் வரிசையாகப் போடப்பட்ட வாடகை சிம்மாசனங்களில் விழாத் தலைவரும், சிறப்பு விருந்தினர்களும் உட்கார்ந்திருந்தனர்.

காம்ப்பியர் அறிவித்ததைத் தொடர்ந்து பட்டுப்புடவை கட்டிய ஒரு பெண்மணி சம்பிரதாயமாகக் குத்துவிளக்கு ஏற்றி வைத்து விழாவைத் தொடங்கி வைத்தாள்.

தமிழ்த் தாய் வாழ்த்து ஸ்பீக்கரில் முழங்கிய பின்பு காம்ப்பியர் பெண் மீண்டும் மைக்கைப் பிடித்தாள்.

"இப்போது நியூ டைமன்ஷன் ஸ்டாட்டிஸ்டிக்ஸ் ப்ரைவேட் லிமிடெட்டின் இந்தியக் கிளை செயலாளர் பேசுவார்..."

சபாரி அணிந்த அந்த கோதுமை நிற மனிதர் மூக்குக் கண்ணாடியைச் சரியாய்ப் பொருத்திக்கொண்டே மைக்குக்கு முன்னால் வந்தார்.

"பேச்சுப் போட்டி இன்னும் சற்று நேரத்தில் துவங்கப் பட இருக்கிறது... அதற்கு முன்னால் இந்தப் பேச்சுப் போட்டியை நடத்தும் எங்களைப் பற்றி சுருக்கமாக... மிகவும் சுருக்கமாக... ஒரு சில வார்த்தைகளில் சொல்ல விரும்புகிறேன்... மாணவர்கள் தயவு செய்து பொறுமை காக்கவும்..."

ஹாலில் பின்வரிசையிலிருந்து இரண்டொரு விசில் சப்தம் எழுந்தது.

"என் ஆள் புஷ்பராணி எப்படி மாபேகவா...?"

யாரோ ஒருவன் குரல் கொடுத்தான்.

மைக்கைப் பிடித்த அந்த அகம்பெனி செயலாளர் மிகவும் பொறுமையாக வேண்டுகோள் வைத்தார்.

"மாணவ... மாணவிகளே...! இந்தப் பேச்சுப் போட்டி நடத்தப்படுவதன் நோக்கமே... மாணவ சக்தியை எப்படி நெறிப்படுத்துவது என்பதைக் கண்டறியத்தான்... ஆகவே

இந்தியாவின் நெருக்கடியான பல கால கட்டங்களில் பொறுப்புடன் செயலாற்றிய முந்தைய தலைமுறை மாணவர்களுக்கு நாங்கள் சற்றும் சளைத்தவர்கள் அல்ல என்பதை உங்கள் பொறுப்புணர்ச்சியைக் காண்பித்து நிரூபிக்க வேண்டுகிறேன்..."

இப்படி அவர் சொன்னதும் சலசலப்புக்கள் அடங்கி விட்டன.

தனது பேச்சைத் தொடர ஆரம்பித்தார்.

"முதலில் எனது நிறுவனம் பற்றிச் சொல்லி விடுகிறேன்... இதன் தலைமை அலுவலகம் அமெரிக்கா வில் உள்ளது... இது ஒரு அமெரிக்கக் கம்பெனி... ஒரு பிரச்னை குறித்து புள்ளி விபரங்களைக் கணித்து அந்தப் பிரச்னையின் மூல காரணங்களையும் அதைத் தீர்ப்பதற் கான வழிமுறைகளையும் வகுத்துக் கொடுப்பது எங்கள் நிறுவனத்தின் தலையாய பணி... அமெரிக்க அரசாங்கம் பல முக்கிய முடிவுகளை எடுக்க நாங்கள் கொடுத்த புள்ளி விபரங்கள் உதவியிருக்கின்றன... பல புள்ளி விபர முடிவுகள் அரசியல் போக்கையே மாற்றியிருக்கின்றன... பல்வேறு நாடுகளிலும் கிளை பரப்பியிருக்கும் எங்கள் நிறுவனம் இந்திய அரசாங்கத்திற்காக மாணவ சக்திகளைத் திரட்டும் வழி வகைகளை ஆராயத் துவங்கி இருக்கிறது... இன்றைய மாணவர்கள்தான் நாளைய முதாயம்... அவர்களுக்கு நம் நாட்டின் மேல் இருக்கும் விருப்பு வெறுப்புகளைப் பொறுத்துத்தான் நாளை அவர்கள் செயல்பாடுகளும் அமையும்... ஆகவே முதற் கட்டமாக இந்தியாவின்பால் மாணவ மாணவிகளுக்கு இருக்கும் விருப்பு வெறுப்புகளை ஆராயும் நோக்கத்துடன் இந்தியாவின் முக்கிய நகரங்களில் ஸ்டூடன்ட்காலேஜ் பேச்சுப் போட்டி நடத்துகிறோம்... இந்தப் போட்டிகளில் பேகம் மாணவ மாணவிகளின் பேச்சுக்கள் மிக மிக முக்கியத்துவம் வாய்ந்தவை... அவர்கள் சொல்லும் கருத்துக்கள் அரசாங்கத்தால் ஆராயப்பட இருக்கின்றன... அத்தக் கருத்துக்களின் அடிப்படையில் நாட்டை சீரமைக்கும் யோசனை இந்த அரசாங்கத்துக்கு இருக்கிறது... ஆகவே... இந்தியாவின் எதிர்காலத்தை வளமானதாக ஆக்க உங்கள் பேச்சு உதவட்டும்... வணக்கம்..."

அவர் பேச்சை முடித்துக் கொள்ள கைதட்டல் ஒலி கேட்டது.

அடுத்து காம்ப்பியர் ஒவ்வொரு பேச்சாளரின் பெயராக அறிவிக்க ஆரம்பித்தாள்.

உஷா...
விஜயமோகன்...
நந்தினி...
கார்த்திகேயன்...
.....
.....

நீண்ட நேரம் கழித்து துங்கபத்ராவின் பெயர் அறிவிக்கப்பட்டது.

யுவனைப் பார்த்துக் கை அசைத்துவிட்டு துங்கபத்ரா மேடையை நோக்கிப் போனாள்.

பக்கவாட்டில் கால்வட்டமாய் வளைந்து மேலே எறும் படிகளில் தடதடத்து மேடைக்கு வந்தாள்.

"தலைவர் அவர்களே...! அன்பான மாணவ மாணவி களே...! இந்த இந்தியாவில் பிறந்ததற்காக வெட்கத் தூறும்... வேதனையுறும்... வெறுப்போடும் இருக்கும் துங்கபத்ராவின் வணக்கம்..."

அத்தனை நேரம் மிகவும் சைவமாக - இந்தியாவை விழுந்து விழுந்து நேசிப்பதாகவெல்லோருமே பேசிவிட்டு போயிருக்க - துங்கபத்ரா இப்படி ஆரம்பித்ததும் மொத்த பேரின் கவனமும் சட்டென்று அவள் மேல் விழுந்தது.

எல்லோருமே நிமிர்ந்து உட்கார்ந்தார்கள்.

அவள் பேச்சைக் கேட்க காதுகளைக் கூர் தீட்டி கொண்டார்கள்.

அவள் தொடர்ந்தாள்.

"இதற்கு முன்னால பேசியவர்கள் எல்லோரும் கிளிப்பிள்ளை போல என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில் என்கிற ரீதியில் பேசிவிட்டுப் போனார்கள் வாஸ்தவம்தான்... எல்லா வளங்களுமே இருக்கின்றன ஆனால் வளம் மட்டும் இருந்தால் போதுமா...? அவை முறையாகப் பயன்படுத்தத் தேவையான ஒழுக்கம் கட்டுப்பாடு... ஒற்றுமை... இவற்றில் எதுவுமே துளி அளவு கூட இந்த தேசத்தில் இல்லை... ஆகவே அத்தனை வளங்களும் நாய் பெற்ற தென்னம்பழமாய்ப் போய் விட்டது... ஆகவே நான் இந்தியாவில் பிறந்ததற்காக வெட்கப்படுகிறேன்..."

விசில் சப்தம் பீறிட்டது.

துங்கபத்ரா சப்தங்கள் ஓய்வதற்காக ஒரிரு விநாடிகள் இடைவெளி விட்டு விட்டுத் தொடர்ந்தாள்.

"தற்சமயம் இந்த நாடு இருக்கும் நிலைமை சரியில்லை... காஷ்மீரிலே தீவிரவாதம்... கர்நாடகாவிலே மொழி வெறி... ஆந்திராவில் நக்சல்கள்... அயோத்தியில் ராமரும் பாபரும்... பீஹாரில் நிலச்சுவான்தார்கள், பூமிகார்கள் அட்டகாசம்... கேரளத்தில் திசை மாறிய கம்யூனிஸம்... ஒரிசாவிலே பாதிரியார் படுகொலை... மும்பையில் தாதாக்கள், குண்டுவெடிப்பு... தமிழ்நாட்டிலே ஜாதி வெறி... மொத்தத்தில் அரசியல்வாதிகளின் அட்டகாசங்கள்... அதிகாரிகளின் ஊழல்... இன்னும் பட்டியலிட்டுக்கொண்டே போகலாம்... சொல்லுங்கள்... சுயபுத்தி இல்லாத குடிமகன்கள்... பொது தலம் கருதாத அரசியல் தலைவர்கள்... இவர்களுக்கு நடுவே பிறந்ததற்காக உங்களால் பெருமைப்பட முடியுமா...? ஆகவேதான் இந்த இந்தியாவில் பிறந்ததற்காக நான் மிகவும் வெட்கப்படுகிறேன்..."

துங்கபத்ரா நீளமாய்ப் பேசி மூச்சுவிடுவதற்காக சற்றே நிறுத்த, கைதட்டலும்... விசில் ஓசையும் கூரைக்கு மேலே பறந்தன.

அவள் தொடர்ந்தாள்.

"இவ்வளவுக்கும் காரணம் பொங்கி எழத் தெரியாத படிப்பறிவற்ற ஜனங்கள்... படித்திருந்தும் அறிவற்று நமக்கேன் வம்பு என ஒதுங்கும் ஜனங்கள்... நாட்டுக்காக அரசியல் பணி என்பதை மறந்து தனக்காகவும்... கட்சிக்காகவும்... பதவிக்காகவும்... அரசியல் பண்ணும் அரசியல்வாதிகள்... சட்டத்தை மதிக்காத ஜனங்கள்... சட்டத்திற்கு மதிப்பளிக்கத் தவறிய அரசியல்வாதிகள்... சட்டத்தை நிலை நிறுத்தத் தவறிய அதிகாரிகள்... பசிக்காக பத்து ரூபாய் திருடியவன் மேல் பாயும் இந்த நாட்டின் சட்டம்... பத்து கோடிகள் சுருட்டியவனிடம் கூழைக் கும்பிடு போடும்... நான் திருட்டை நியாயப்படுத்திப் பேசவில்லை... எல்லோரின் மேலும் சட்டம் சமமாகப் பாய வேண்டும் என்கிறேன்... இப்படிப்பட்ட இந்திய நாட்டில் பிறந்ததற்காக எண்ணைப் பெருமைப்படச் சொல்கிறீர்களா...?"

மறுபடியும் கரகோஷம்.

"ஒவ்வொரு சுதந்திர தினத்தின் போதும் மூவர்ணக்

கொடியை ஏற்றி வைத்துவிட்டால் அதுதான் தேசபக்தி என்று நினைக்கிறார்கள்...அப்படிப்பட்ட வெளி வேஷம் தேவையில்லை... இந்த நாட்டில் மூவர்ணக் கொடியை ஏற்றும் தகுதியாருக்குமே இல்லை... மூவர்ணக்கொடியை ஏற்றி வைத்துக் கொண்டாடும் நிலையில் இந்த நாடும் இல்லை... என்று வறுமை ஒழிகிறதோ... என்று நீதி தழைக்கிறதோ... என்று எல்லோருக்கும் கல்வி சாத்தியப் படுகிறதோ... அன்றுதான் மூவர்ணக் கொடியை நாம் ஏற்றவேண்டும்... அதுவரை மூவர்ணக் கொடி பறக்கிற கம்பங்களில் கறுப்புக் கொடிதான் பறக்கவேண்டும்... கறுப்புக் கொடியைப் பார்த்தாலாவது இந்த கேடு கெட்ட ஜனங்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் புத்தியில் உறைக்காதா என்ற ஆதங்கத்தில் சொல்கிறேன்..."

கைதட்டல்.

"இதற்கெல்லாம் விடிவு காலமே இல்லையா...? இருக்கிறது...! குற்றம் செய்தவர்கள்... கடமையைச் செய்ய மறந்தவர்கள்... ஆகியோர் உடனடியாகக் கடுமையாகத் தண்டிக்கப்படும் நிலை வரவேண்டும்... தண்டனையி லிருந்து தப்பிக்க முடியாது... தண்டனையைக் காலம் கடத்த முடியாது... என்ற பய உணர்வே நாட்டை கபிட்சமாக்கும்... சட்டம் தன் கடமையைச் செய்ய மறக்கிறபோது... சட்டம் கடமையைச் செய்ய இயலாமல் கையைப் பிசைந்து கொண்டு நிற்கிறபோது அதைச் செய்யமானவசமுதாயம் துணிவுடன்முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்... அப்படி ஒரு காலம் வந்த பின்புதான்நான்மட்டுமல்ல... என்னைப்போலலட்சோப லட்சம் மானவ மாணவிகள் இந்த இந்தியாவில் பிறந்ததற்காகப் பெருமைப்பட முடியும்... இல்லையேல் இங்கே பிறந்ததை நினைத்து வெட்கப்படத்தான் முடியும்..."

வேகமாய்-

ஆக்ரோஷமாய்-

நிஜமானகாட்டத்தோடு-

பேசி முடித்துவிட்டுக் கையைக் கூப்பி துங்கபத்ரா விடை பெற்று மேடையினின்றும் இறங்க ஆரம்பிக்க- சென்ட்டினரிஹாலில்ஊசிமுனைநிசப்தத்தோடு அவள் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த அத்தனைகூட்டமும் திடீரெனஉயிர் பெற்றதைப் போலபடபடவென்றுகர

கோஷம் எழுப்ப ஆரம்பித்தது.

தப்...

தப்...

தப்...

கரவொலிச் சப்தம் வெகு நேரத்துக்கு ஓயவில்லை.

"யார் இந்தப் பொண்ணு...?"

"எந்த காலேஜ்...?"

"தூள்கிளப்பிடுச்சுடா..."

"ஒவ்வொரு பாயின்ட்டும் நச்..."

"பாகிஸ்தானை முஷாரஃப் எடுத்துக்கிட்ட மாதிரி... இந்தப் பொண்ணு நம்ம நாட்டை எடுத்துக்கிட்டா நாடு உருப்படும்ன்னு தோணுது..."

கூட்டத்தில் அவரவர்கள் தங்களுக்குத் தோன்றிய கமெண்ட்களை விநியோகித்துக் கொண்டார்கள்.

இருக்கைக்கு வந்த துங்கபத்ராவின் கையைப் பிடித்தான்யுவன்.

"துங்கா... அசத்திட்டே...! மொத்த ஹாலையுமே உலுக்கி எடுத்துட்டே... எழுதி வெச்சுக்கோ... உனக்குத் தான் பரிசு கிடைக்கப் போகுது..."

துங்கபத்ரா அலட்சியமாகச் சிரித்தாள்.

"பரிசுக்காக நான் பேசலை யுவன்...! நிஜமான ஆத்திரத்தோட பேசினேன்... பேச வாய்ப்பு கிடைச்சப்ப பேசினேன்... பேசினதைப் போலவேசெயல்ல இறங்கவும் வாய்ப்பு கிடைச்சா இந்த அழுக்கு இந்தியாவை சுத்தம் பண்றதுக்காகக களத்தில் இறங்கத் தயங்கமாட்டேன்..."

"நீபேசினதெல்லாம்கைதட்டலுக்குநல்லா இருக்கு...! ஆனா நடைமுறையில் சாத்தியம் இல்லை... சட்டம் கையைக்கட்டிக்கிட்டுஉக்காந்திருக்கிறப்போ... அதைக் கையிலெடுத்துக்கச் சொல்லி மாணவர்களைக் கூப்பிடறே... அதை நடைமுறைப்படுத்தினா தீவிர வாதிகள்ங்கற முத்திரைதான் நமக்குக் கிடைக்கும்..."

"கிடைக்கட்டுமே...! தலைவர்கள்ன்னு சொல்லிக் கிட்டு அரசியல் நாடகம் ஆடறவங்க கையில் தேசம் மாட்டிக்கிட்டிருக்கு... தீவிரவாதத்தாலதான் அவங்க கிட்டே இருந்து நாட்டை மீட்க முடியும்ன்னா அதை செய்யறதில்தப்பில்லை..."

"நீ சொல்றதை என்னால ஏத்துக்கமுடியாது துங்கா..."

"உன்னைநான்ஏத்துக்கச் சொல்லலியே...?"

"எனக்கு பயமா இருக்கு..."

"என்ன பயம்...?"

"ஒரு வேகத்தில் நீ தப்பான பாதையில் போயிடு வியோன்னு பயப்படறேன்...அந்த அளவுக்கு ஆத்திரமும் ஆவேசமும் உன்னோட பேச்சில் தெரிச்சது..."

"என்மனசுக்குச் சரின்னு படற பாதையில் நான் துணிஞ்சு போவேன்...என்னை யாரும் தடுக்க முடியாது..."

"துங்கா...! நீ இன்னும் பேச்சுப் போட்டி மூடிலிருந்து மாறலைன்னு நினைக்கிறேன்... இப்ப நான் என்ன சொன்னாலும் கேக்கற நிலையில் நீ இல்லை... உன்கிட்டே நிதானமா ஒரு நாள் நான் பேசிக்கறேன்..."

அந்த டாபிக்கை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தான் யுவன்.

மேடையில் யாரோ ஒரு பையன் மைக் முன்னால் சொத சொதப்பிக் கொண்டிருந்தான்.

கூட்டம் கத்திக் கொண்டிருந்தது.

"அறுக்காதே...! அறுக்காதே...!"

இடையிடையே சிறப்பு விருந்தினர்கள் பேசினார்கள். எல்லோருமே துங்கபத்ராவின் பேச்சாற்றலைப் புகழ்ந்தார்கள். ஆனால் இதே பேச்சாற்றலை இந்தியாவில் பிறந்ததற்காகப் பெருமைப்படுகிறேன்என்ற தலைப்பில் வெளிப்படுத்தியிருந்தால் குறைந்தபட்சம் பத்து தேசாபிமானிகள் உருவாகியிருப்பார்கள் என்று சொன்னார்கள்.

"துங்கா...! என்ன சொல்றாங்க பார்த்தியா...?"

"இதெல்லாம் பேலி தேசப்பற்று... மேடையில் முழங்கினா மட்டும் நாட்டுப்பற்று பத்தாது... தடை முறையில் இருக்கணும்..."

கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் கழிந்த பின்பு அந்தப் பேச்சுப் போட்டி முடிவுக்கு வந்தது.

அரையிருட்டானதுவீலர் பார்க்கிங்கில் நிறுத்தியிருந்த யுவனின் ஸ்ப்லெண்டரில் பரவினார்கள்.

துங்கபத்ரா அவனை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள்.

ஹெட்லைட்டில் ஒற்றைக்கண் வெளிச்சம் கொத்தாகச் சாலையில் விழ - குளிர் காற்றை வெட்டிக் கொண்டு பறக்க ஆரம்பித்தார்கள்.

கணிசமான இடைவெளி விட்டு - அவர்களின் பைக்கை ஒரு கார் பின் தொடர்ந்து கொண்டிருந்தது.

காரின் முன்சீட்டிலிருந்த அந்த ஆசாமி - ஸ்டியரிங்கைக் கையாள்கிறவனிடம் சொன்னான்.

"அந்தப் பைக்தான்..."

"பின்னாடி உக்காந்திருக்காளே... அந்தப் பொண்ணுதானே...?"

"ஆமா...அவளேதான்..."

"அவ பேர் என்ன...?"

"துங்கபத்ரா..."

"எந்த காலேஜ்...?"

"ஆர்ட்ஸ் காலேஜ்..."

"ஃபேமிலி பேக்கிரவுண்ட்.....?"

"இனிமேத்தான் விசாரிக்கணும்..."

"மசிவாளா...?"

"மசிய வெக்க முடியும்...முடியணும்..."

என்றான் அவன் தாடியைச் சொறிந்து கொண்டே...

5

ஆற்றங்கரை முழுவதும் மரண ஓலம்.

பாலம் கணிசமாய் சேதாரமடைந்திருக்க - ஆற்று நீருக்குள் விழுந்திருந்த ரயிலின் கம்பார்ட்மெண்ட்களை க்ரேன்கள் ராட்சசக் கைகளால் சிரமத்தோடு தூக்கி நிறுத்திக் கொண்டிருந்தன.

ரெஸ்க்யூ டீமின் ஒரு பிரிவினர் பிணங்களை அள்ளிக் கரையில் வரிசையாய்ப் படுக்க வைத்துக் கொண்டிருக்க - இன்னொரு பிரிவினர் இடிபாடுகளில் சிக்கி மிச்சம் மீதி உயிர் பிடித்திருக்கும் நபர்களைக் காப்பாற்றும் நடவடிக்கையில் தீவிரமாக இறங்கியிருந்தனர்.

இன்னோர் புறம் பிணங்களை அடையாளம் காணும் முயற்சிகள் நடந்து கொண்டிருந்தன.

வந்து சேர்ந்திருந்த உறவினர்களின் கதறல்கள் அத்தப் பிராந்தியத்தையே உலுக்கி எடுத்துக் கொண்டிருந்தது.

கவலையை கனமாய் எடுத்துப் பூசிக் கொண்ட ஐ.ஏ.எஸ் அதிகாரிகள், அரசியல் பிரமுகர்கள்... பரபரப்பைத் தத்தெடுத்துக் கொண்ட பத்திரிகை போட்டோக்ராஃபர்கள், ஸாட்டிலைட் சேனல்களின் வீடியோக்ராஃபர்கள்...

"என்னோட சர்வீஸில் இதைப் போல ஒரு கோரமான

விபத்தைநான்பார்த்ததே இல்லை..."

ஜென்ஸன்பெருமூச்சுடன்சொல்லிவிட்டு - மீண்டும் கேட்டார்.

"இதுவிபத்தா...?சதியா...?"

அஜய்வர்மாநெற்றியைக்கீறிக்கொண்டேநிமிர்ந்தார்.

"மிகவும் தரோவா சோதனை மேற்கொண்ட பின்புதானே ரயில் புறப்படுவதற்கு க்ளியரன்ஸ் கொடுத்தோம்...?"

"ரயில் கவனமாக சோதிக்கப்படவில்லை என்று மேலிடம்புகார்கூறுகிறதா...?"

"எடுத்தஎடுப்பில்அவர்களுக்குஅப்படித்தான்தோன்றும்... ஒரு டைனமைட் கிடைத்ததும் சோதனையைப் பாதியில் முடித்துக் கொண்டிருப்போம் என்று மேலிடத்தில் நினைக்கிறார்கள்..."

"நோ... நோ... கிட்டத்தட்ட மூன்று மணி நேரங்கள் தரோவான சோதனை மேற்கொண்டது எனக்குத் தெரியும்..."என்றார்ஜென்ஸன்.

"ஒரு முறை அல்ல... மூன்று முறை ரயில் சோதிக்கப்பட்டது... ரிமூவ் செய்யப்பட்ட அந்த டைனமைட் தவிர வேறு சந்தேகப்படும்படியான பொருட்கள் எதுவும் கிடைக்கவே இல்லை... இது விபத்தாக இருக்கலாமோ... என்ற சந்தேகம் எனக்கு உள்ளது..."

அஜய்வர்மாவின் கருத்துக்கு ஜென்ஸனிடமிருந்து மறுப்பு வந்தது.

"சிக்னல்களில்தவறுஎதுவும்ஏற்படவில்லை...ட்ராக் மெயின்ட்டெனன்ஸ் மற்றும் வெகிக்கிள் மெயின்ட்டெனன்ஸை எடுத்துக்கொண்டால்மிகமிகச் சமீபத்தில்தான் அவை பராமரிப்பு செய்யப்பட்டு உள்ளன..."

"பெரியவெடிசத்தம்கேட்டதாகஉயிர்பிழைத்தவர்கள் சொல்கிறார்கள்... ரயில் கம்பார்ட்மென்ட் சிதறிக் கிடக்கின்றன...தீயில்கருகியிருக்கின்றது..."

"தீ விபத்தாக இருக்கலாம் அல்லவா...? இது என் யூகம்..."

அஜய்வர்மா சொன்னதை ஜென்ஸன் உடனடியாய் மறுத்துத்தலையசைத்தார்.

"சேதத்தின் அளவைப் பார்க்கும் போது அப்படி

நினைக்கத் தோன்றவில்லை... தவிர ரயிலின் என்ஜின் பகுதியில்தான்சேதம்அதிகமாக உள்ளது...பேன்ட்ரிகார் மத்தியில் இணைக்கப்பட்டு இருக்கிறது..."

அஜய்வர்மாமோவாயைவழுவினார்.

"நீங்கள் சொல்வதும் சரிதான்... ரயில் ஆற்றுப் பாலத்தின் மீது சிதறியிருக்காவிட்டால் உயிர்ச் சேதம் குறைவாய் இருந்திருக்கும்..."

"இதையெல்லாம் பார்க்கிற போதுதான் சதிகாரர்கள் திட்டமிட்டு ஆற்றுப் பாலத்தின் மேல் ரயில் விபத்தை ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்று சொல்கிறேன்..."

"ஆனால்தரோவாகரயில்சோதனைஇடப்பட்டதே... அதை மீறி சக்தி வாய்ந்த வெடி பொருட்கள் ரயிலுக்குள் வந்தது எப்படி...?"

அஜய்வர்மாவின்கேள்விக்குஅவரிடமிருந்துமவுனம் பதிலாக வந்தது.

அதே விநாடி -

ஸெஸ்யூ நடவடிக்கையில்ஈடுபட்டிருந்தஜூர்.பி.எஃப் போலீஸ் ஒருவர் வேகமாய் நெருங்கி வந்தார்.

"எக்ஸ்க்யூஸ்மீஸார்..."

அஜய்வர்மாதிரும்பினார்.

"எஸ்..."

"உயிருடன்மீட்கப்பட்டசிலரில்கடைசிப்பெட்டியில் இருந்த கார்டு லால்ஜியும் ஒருவர்... அவர் உங்களிடம் ஏதோசொல்லவிரும்பினார்ஸார்..."

அஜய்வர்மாவும்... ஜென்ஸனும் சற்றே பரபரப் பானார்கள்.

"இஸிட்....?எங்கேஅவர்...?"

"ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு இருக் கிறார்..."

"ஆஸ்பத்திரிக்கா...?"

"ஆமாம் ஸார்... தண்ணீருக்குள் மாட்டிக் கொண்டு வெகு நேரம் மூச்சுத் திணறியிருக்கிறார்... தலையிலும் தோள்பட்டைப் பகுதியிலும் ரத்தக் காயம் வருமளவுக்கு அடிபட்டு இருக்கிறார்... நாங்கள் அவரை மீட்ட போது லேசாய்...மிகலேசாய்உணர்வுவந்தது...அப்போதுதான் உங்களைக்கேட்டிருக்கிறார்...மீண்டும்மயக்கமடைந்து விட்டார்...ஸ்பாட்டில்இருக்கும்டாக்டர்அவரைஉடனே ஆஸ்பத்திரிக்குக்கொண்டு செல்வது நல்லது என்றார்..

தயாராய் இருந்த ஆம்புலன்சில் மற்ற அபாயக்கட்ட பிரயாணிகளுடன் அவரையும் ஏற்றி அனுப்பி வைத்து விட்டு உங்களிடம் வந்தேன்..."

"லால்ஜியின் உடல்நிலை எப்படி இருக்கிறது...? மற்றபடியும் அவருக்கு எப்போது உணர்வு திரும்பும்...?"

"அதைப் பற்றி இப்போது எதையும் சொல்லமுடியாது என்றார் டாக்டர்... அவருக்கு உணர்வு திரும்பும் போது நீங்கள் ஆஸ்பத்திரியில் இருந்தால் அவர் சொல்லும் தகவலைப் பெற வசதியாய் இருக்கும்..."

அஜய்வர்மா ஜென்ஸனிடம் திரும்ப - அவர் தலையசைத்துக் கொண்டே சொன்னார்.

"நாம் இருவருமே ஆஸ்பிட்டல் போகலாம் அஜய் வர்மா..."

அடுத்த சில நிமிஷங்களில் ஜீப் ஆஸ்பத்திரியை நோக்கிச் செல்ல ஆரம்பித்தது.

ஆஸ்பத்திரி வளாகம் பரபரப்பைத் தத்தெடுத்திருந்தது.

திட்டுத் திட்டாய் ஜனங்கள் கவலையைத் தாங்கியிருந்த முகங்களோடு குழுமி இருந்தார்கள். சில இடங்களில் அழுகை ஒலம் நெஞ்சை அறுத்தது.

ஆம்புலன்ஸ்கள் சைரன் ஒசையோடு உள்ளே நுழைவதும் - அடிபட்டவர்களை ஸ்ட்ரெச்சர்களில் இறக்கிவிட்டுச் செல்வதுமாய் இருந்தன.

பார்க்கிங்கிற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் ஜீப்பை நிறுத்திவிட்டு - வேக நடையில் உள்ளே சென்றார்கள்.

ஜென்ஸன்கேட்டார்.

"இப்போது நாம் தலைமை டாக்டரைப் பார்க்க வேண்டுமா...?"

"ஆமாம்... லால்ஜி எங்கே அட்மிட் செய்யப்பட்டு இருக்கிறார் என்பதை தற்போது உள்ள பரபரப்பில் யாரிடமும் விசாரித்துத் தெரிந்து கொள்ளமுடியாது..."

அழுக்கான வராந்தாக்களைக் கடந்து சென்றார்கள்.

தலைமை டாக்டரின் அறைக்குள் நுழைய - அவர் போனில் பேசிக் கொண்டிருந்தார்.

"வி ஆர் ட்ரையிங் அவர் லெவல் பெஸ்ட்.... இங்கிருக்கும் வசதிகளை வைத்து எந்த அளவுக்கு உயிர்களைக் காப்பாற்ற முடியுமோ அதைச் செய்து

கொண்டிருக்கிறோம்... பல்வேறு தனியார் மருத்துவ மனைகளில் இருந்தும் டாக்டர்கள் பணியாற்ற முன் வந்திருக்கிறார்கள்..."

"....."

"அத்தியாவசிய மருந்துகளுக்கு அவசரமாய் இண்டென்ட் போட்டு அனுப்பி இருக்கிறோம்... வேன் போயிருக்கிறது... அதேகமாய் இன்னும் ஒரிரு மணி நேரங்களுக்குள்ளாக மருந்துகள் மற்றும் ஆக்சிஜன் சிலிண்டர்களோடு வேன் திரும்பி வந்து விடும்..."

அறைக்குள் நுழைந்த ஜென்ஸனையும், அஜய் வர்மாவையும் போனில் பேசிக் கொண்டே - பார்வையில் வாங்கி - உட்கார சைகை காட்டினார்.

மேலும் ஒரிரு நிமிஷங்கள் அவர் போன் பேசி முடிக்கும் வரை இருக்கையில் காத்திருந்தார்கள்.

ரிசீவரைச் சாத்திவிட்டு நிமிர்ந்தார் தலைமை டாக்டர்.

"எஸ்..."

கார்டு லால்ஜி இங்கே அட்மிட் செய்யப் பட்டிருப்பதையும் - அவர் தன்னிடம் ஏதோ தகவல் தெரிவிக்க விரும்புவதையும் சுருக்கமாக விவரித்தார் அஜய்வர்மா.

"அவர் எந்த வார்டில் இருக்கார்... இப்ப என்ன நிலைமையில் இருக்கார்ன்னு தெரியணும் டாக்டர்..."

"விபத்து பெரிய அளவில் நடந்திருப்பதால் இந்த மொத்த ஆஸ்பத்திரியுமே இப்ப ஒரு ஐ சி யூனிட் மாதிரி செயல்பட்டுட்டிருக்கு..."

"லால்ஜி எங்கே அனுமதிக்கப்பட்டு இருக்கார்ன்னு எங்களால கண்டு பிடிக்க முடியாது... ஒவ்வொரு இடமா விசாரிப்பதிலேயே நேரம் போயிடும்... அவருக்கு எந்த நிமிஷம் உணர்வு வந்தாலும் நான் அவர் கிட்டே இருந்து விபரம் வாங்க வேண்டியிருக்கு... அதனாலதான் உங்க உதவியை நாடியிருக்கோம்..."

தலையசைத்த தலைமை டாக்டர் - இன்டர்காமை உயிர்ப்பித்து ஒவ்வொரு வார்டுக்கும் பொத்தான்களை அழுத்திப் பேச ஆரம்பித்தார்.

"எஸ்... அவர் விபத்துக்குள்ளானபோது அவர் பாக்கெட்டில் இருந்த விசிட்டிங் கார்டு... பெயர் லால்ஜி..."

...

...

...

திமிஷங்கள் வழிய - விடை கிடைத்த திருப்தியோடு ரிசீவரைச் சாத்தினார்.

"இன்ஸ்பெக்டர்...! ஆப்ரேஷன் முடிந்து அவர் வார்டு நம்பர் ஐந்தில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்..."

"இப்போது அவர் சுயநினைவுடன் இருக்கிறாரா...?"

"அதைப்பற்றி கேட்கவில்லை... நீங்கள் நேரில் சென்று அந்த வார்டில் ட்யூட்டி பார்க்கும் நர்சிடம் மற்ற விபரங்களைக் கேட்டுக் கொள்ளுங்கள்..."

இதற்குள் டெலிபோன் அலற ஆரம்பித்தார். டாக்டர் அதை எடுத்துப் பேச ஆரம்பித்தார்.

அஜய்வர்மாவும், ஜென்ஸனும் அந்த அறையினின்றும் வெளிப்பட்டு ஐந்தாம் நம்பர் வார்டைத் தொட்டார்கள்.

அங்கே சுறுசுறுப்பாய் நடமாடிக் கொண்டிருந்த வெள்ளை உடை நர்ஸ்களில் ஒருத்தியை அணுகினார் அஜய்வர்மா.

"எக்ஸ்க்யூஸ்மீ சிஸ்டர்..."

அவருடைய சீருடையையும், சட்டைப் பையில் குத்தியிருந்த நேம் பேட்ஜையும் பார்த்ததுமே - புரிந்து கொண்டவளாய்த் தலையை அசைத்தாள்.

"கார்டு லால்ஜியைப் பார்க்க வந்திருக்கிங்களா...?"

"ஆமா..."

"டீன் இன்ட்டர்காமில் விபரம் சொன்னார்..."

"அவருக்கு இப்ப எப்படி இருக்கு...?"

"தலையில் பலமா அடிபட்டிருந்ததால சர்ஜரி பண்ண வேண்டி இருந்தது..."

"சர்ஜரி முடிஞ்சதா...?"

"முடிஞ்சது..."

"கான்ஷியஸோட இருக்காரா...?"

"இல்லை இன்ஸ்பெக்டர்... ஆனா எந்த நிமிஷமும் அவருக்குக் கான்ஷியஸ் திரும்பலாம்..."

"எங்கே அவர்...?"

"ப்ளீஸ் கம் வித் மீ..."

வரிசை வகுத்திருந்த கட்டில்களில் விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் பேண்டேஜ் கட்டுக்களோடு கிடந்தார்கள்.

வார்டின் மறு கோடியில் படுக்க வைக்கப்பட்டு இருந்தார் லால்ஜி.

பளீர் வெள்ளை பேண்டேஜ் துணி அவர் தலையிலும் தோள்பட்டையிலும் காலிலும் லேசான ரத்தக் கசிவுகளோடு இருந்தது.

கண்களை மூடியிருந்தார்.

உயரத்தில் தொங்கிய ட்ரிப்ஸ் பாட்டிலில் இருந்து - சொட்டுச் சொட்டாக திரவம் அவர் ரத்த ஓட்டத்தோடு கலந்து கொண்டிருந்தது.

"இடையிலே அவருக்கு எப்பவாச்சும் மயக்கம் தெளிஞ்சதா...?"

"இல்லை இன்ஸ்பெக்டர்...! அப்படியே கான்ஷியஸ் வந்திருந்தாலும் அவரால பேச முடிஞ்சிருக்காது... என்ன ரொம்ப பலமா அடிபட்டிருந்தார்..."

"இப்போ கான்ஷியஸ் திரும்புச்சுன்னா அவரால பேச முடியும்...?"

"கொஞ்சம் சிரமப்பட்டு பேசலாம்..."

"அவரோட உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லையே...?"

"அபாயக் கட்டத்தை அவர் தாண்டிட்டார் இன்ஸ்பெக்டர்..."

"தேங்க்காட்...!"

பெருமூச்சோடு ஜென்ஸனும், அஜய்வர்மாவும் அங்கிருந்த பெஞ்ச்ஒன்றில் காத்திருக்க ஆரம்பித்தார்கள்.

கிட்டத்தட்ட அரை மணி நேரம் தீப்பிடித்த பஞ்சுத் துண்டம் போல வேகமாய்ப் பொகங்கிப் போயிருக்க - முப்பத்தியோராவது நிமிஷம் -

நர்ஸ் பெண் வேகமாய் அவர்களிடம் வந்தாள்.

"இன்ஸ்பெக்டர்...! லால்ஜிக்கு உணர்வு திரும்பியிருக்கு..."

அஜய்வர்மா பரபரப்போடு பெஞ்சைவிட்டு எழுந்தார்.

ஜென்ஸன் அவரைப் பின்தொடர்ந்தார்.

படுக்கையில் கிடந்த லால்ஜியிடம் அசைவுகள் தெரிந்தன.

அஜய்வர்மா அவரிடம் குனிந்து ஆதரவாய்த் தோளைப் பற்றிக் கொண்டு கேட்டார்.

"லால்ஜி...! எப்படி இருக்கிங்க...?"

"ப... பரவாயில்லை... த... தலையில்... வ... வலி..."

"சரியாயிடும்... சீக்கிரம் சரியாயிடும்... என்கிட்டே என்னவோ சொல்ல விரும்பினிங்களாமே...?"

"அ... ஆமா... உ... உங்களுக்கு ஒ... ஒரு முக்கியமான

மெஸேஜ்பாஸ்பண்ணனும்ன்றுதி...நினைச்சேன்...அ... ஆனா...அதுக்குள்ளேமயக்கமாயிட்டேன்..."

"என்னதகவல்...?இப்பசொல்லுங்க..."

"அ... அந்த வி... விபத்து... தீவிரவாதிகளின் திட்டமிட்டசதிஅ...அஜய்வர்மா..."

"உங்களுக்குஎப்படித்தெரியும்...?"

"ர... ரயில் விபத்துக்குள்ளாகப் போகிற க... கடைசி விநாடியில்எ...எனக்குஎ...என்ஜின்ரூமிலிருந்துபோன் வ...வந்தது..."

"யார்பேசினாங்க...?"

"எ...என்ஜின்டிரைவர்சந்திரமேனன்..."

"அவர்என்னசொன்னார்...?"

"ர... ரயில்ல டைனமைட் வெச்சிருக்காங்க... இங்கே என்ஜின் ரூமில்தான் வைக்கப்பட்டிருக்கு... நான் உயிர் பிழைக்க வாய்ப்பில்லை... ஒரு வேளை கடைசிப் பெட்டியில்இருக்கிறநீங்கஉயிர்தப்பினா...இந்தசதிக்குக் காரணமான ஆளை போலீசுக்கு அடையாளம் காட்டணும்...அப்படின்னுசொன்னார்..."

அஜய்வர்மாபரபரப்போடும்ஆர்வத்தோடும்அவரைப் பார்த்தார்.

"யார்அந்தஆள்லால்ஜி...?"

"இ...இன்னொருஎன்ஜின்டிரைவராஜூ...சிவசங்கர்..."

"அ...அவரா...?"

"அ... அப்படித்தான் சந்திரமேனன் சொன்னார்... சதிகாரர்களுக்கு உடந்தையா இருந்து டைனமைட்டை ரயிலுக்குக் கொண்டு வந்து அவர்தான் வெடிக்க வெச்சிருக்கார்... இந்தத் தகவலை சந்திரமேனன் சொல்லச் சொல்லவே பெரிய சத்தம் கேட்டது...ரயிலில் நான்தடுமாறி விழுந்தேன்... தலையில் அடிப்பட்டது... அ... அதுக்கப்புறம் ந... நான் சுயநிலைவை இழந்துட்டேன்..."

"அப்படின்னாரயிலில்வெடிகுண்டுவெச்சதுஎன்ஜின் டிரைவர்சிவசங்கரா...?"

"அ...ஆமா..."

"இந்த விபத்திலிருந்து சிவசங்கர் தப்பிச்சாரா...? அல்லது அவரும் சேர்ந்து உயிரை விட்டுட்டாரா...?"

"தெ...தெரியலை அ...அஜய்வர்மா..."

அஜய்வர்மாஜென்ஸனிடம்திரும்பினார்.

"அவ்வளவு தரோவா ரயிலை சோதனை போட்டிருந்தும் ரயில் எப்படி வெடி விபத்துக்கு உள்ளாச்சின்னு இப்பப் புரியுது... சிவசங்கர் சதிகாரர்களிடம் விலை போயிருக்கார்... ரயிலில் பொருத்தப்பட்ட டைனமைட் கண்டுபிடிக்கப்பட்டால் ரயிலை வெடிக்க வைக்க வேண்டிய பொறுப்பை அவர்கிட்டே கொடுத்திருக்காங்கன்னுநினைக்கிறேன்... ரயில்வே ஊழியரான அவர் மேல யார்க்கும் சந்தேகம் வரலை... அவரை சோதனை போட்டு ரயிலுக்குள் அனுப்பலை...அவர்மேல்உள்ளஅந்தநம்பிக்கையைப் பயன்படுத்தி ஒரு நம்பிக்கை மோசடிக் காரியத்தை சிவசங்கர்பண்ணிட்டார்..."

அஜய்வர்மா தீவிரமான யோசனையில் மூழ்க ஆரம்பித்தார்.

அவர்உதடுகள்முணுமுணுத்தன.

"சிவசங்கர்யாரிடம்விலைபோனாங்கறதுதான்இப்ப நாம தெரிஞ்சிக்கவேண்டியமுக்கியமானதகவல்..."

மாதுங்கா.

சிவசங்கர் குடியிருந்து வந்த சிறிய வீடு அஜய்வர்மாவினால் மில்லி மீட்டர் மில்லி மீட்டராய் புரட்டிப் போடப்பட்டது.

ஜென்ஸனும் கூட வந்திருந்தார்.

"இந்தடைரியைப்பார்த்திங்களாஜென்ஸன்...?"

அஜய்வர்மாநீட்டியடைரியைவாங்கிப்புரட்டினார்.

"என்னஇது...?சிவசங்கர்எழுதினகவிதைகளா...?"

"கவிதையா...இல்லைகிறுக்கலான்னுதெரியலை... கண்ட்டென்ட்ஸ்தான்முக்கியம்..."

"என்னசொல்றிங்கஅஜய்வர்மா...?"

"அதிலிருந்துஏதாவதுஒருவரியைப்படியுங்களேன்..."

ஜென்ஸன் ஒரு பக்கத்தைப் பிரித்துக் கண்ணில் படர்ந்த வரிகளை சத்தமாய்ப் படித்துக் காட்டினார்.

ஏழையாய்ப்பிறக்காதே.
அல்லது
பணக்காரன்ஆகு.

"என்னபிதற்றல்இது...?"

"இன்னும்ஒருசாம்ப்பிள்படிச்சுப்பாருங்க..."

மேலும் ஒருபக்கத்தைப்புரட்டினார்ஜென்ஸன்.

அங்கேகண்ணில்பட்ட வேறு சிலவரிகளைப்படித்துக் காண்பித்தார்.

ஏழைகளுக்கு
சொர்க்கம்
எங்கோ
மேலே
இருக்கிறது.
பணக்காரர்களுக்கு
சொர்க்கம்
இங்கே
கீழேயே
இருக்கிறது.

"ஒரே ஏழை பணக்காரன் புராணமா இருக்கே...?"

"ஆமா ஜென்ஸன்... அவரோட கிறுக்கல் வரிகளில் அவரோட ஆட்டிட்யூட் என்னன்னு தெரியுது..."

"என்ன...?"

"தலைகீழாநின்னாவதுபணக்காரன் ஆயிடணும்ன்னு நினைக்கறார்... இப்பேர்ப்பட்டவங்களை விலை கொடுத்துவாங்கறது கலபம்..."

"அப்படின்னா ரயில் வெடி விபத்தில் அவர் பலி ஆகியிருக்கவாய்ப்பில்லை...அப்படித்தானே...?"

"ஆமா... பணக்காரனாலி ஒரு ஸீகபோக வாழ்க்கை வாழணும்கறதுதான் அவரோட நோக்கம்... வெடிப் பொருளை இயக்கிட்டு ஆற்றில் குதிச்ச அவர் தப்பிச்சிருக்கலாம்... பணம் சம்பாதிக்கும் முயற்சிகளில் தீவிரமா இறங்கி இருக்கார்ங்கறதுக்கு வேறு சில ஆதாரங்களும் இருக்குபாருங்க..."

"என்ன ஆதாரம்...?"

"நிறைய கம்பெனிகளின் பினாமி ஷேர்ஸ் விளம்பரங்களைக் கத்தரிச்சு வெச்சிருக்கார்... டெலி போன்வாங்கிவெச்சிருக்கார்..."

சொல்லிக் கொண்டே டெலிபோன் பில்களைப் பார்த்துவர் ஒரு எஸ்டிமேட்டிப்போட்காகிதத்தின்மூலையில் பென்சில் எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்த அந்த வாத்தையைப் பார்த்துதிடுக்கிட்டார்.

"ஜென்ஸன்...இதைப்பார்த்திங்களா...?"

ஜென்ஸன்திரும்பினார்.

"என்னஇது...?"

"போன் பேசப் பேச சிவசங்கர் தன்னிச்சையா இந்த வார்த்தையைக் குறிச்சிருக்கணும்..."

"ஸ்வர்க்கபுரி...!"

"ஸ்வர்க்கபுரின்னதும் உங்களுக்கு என்ன ஞாபகத்துக்கு வருது...?"

ஜென்ஸன்சட்டென்று திடுக்கிட்டார்.

"அஜய்வர்மா...யூமீன்...?"

இருவரின் முகங்களிலுமே பரபரப்பின் ரேகைகள் அழுத்தமாய்விழுந்திருந்தன.

6

துங்கபத்ராஹோஸ்டலைவிட்டு வெளியேவந்தபோது ஒரு ஆண்குரல் அவளைத் தடுத்தது.

"எக்ஸ்க்யூஸ்மீ..."

திரும்பிப்பார்த்ததுங்கபத்ராவின்கண்களில் ஒரு தாடி வைத்த இளைஞன்பதிவானான்.

அவள் புருவங்களைச் சுருக்கி -

"எஸ்..."என்றாள்.

"உங்ககூட கொஞ்சம் பேசணும்..."

"என்னபேசணும்...?"

"நேத்திக்கு பேச்சுப் போட்டியில் நீங்க பேசினதைக் கேட்டேன்... உங்களை மனம் விட்டுப் பாராட்ட ஆசைப்படறேன்..."

துங்கபத்ரா அவனைப்பார்த்துப்புன்னகைத்தாள்.

"உங்க பாராட்டுக்கு ரொம்ப நன்றி... என்னைத் தேடிவந்து பாராட்டிப் பேசினதிலேயே என் பேச்சு உங்களை எந்த அளவுக்குக் கவர்ந்திருக்குன்னு தெரியுது...ஐயாம் வெரிமச் ஹேப்பி..."

"இஃப் யூ டோண்ட் மைண்ட் ப்ளீஸ் கம் வித் மீ... நாம கொஞ்ச நேரம் பேசலாம்..."

"உங்கபாராட்டை இங்கேயேதெரிவிச்சிட்டிங்களே...? இதுக்கு மேலே நாம என்னபேசப்போறோம்...? எனக்கும் டைமாயிடுச்சு... மெஸ்ஸுக்குப் போய்ட்டுகாலேஜ்க்குப் போக நேரம் சரியாய் இருக்கும்..."

"இன்னிக்குஒருநாள்மெஸ்ஸில்சாப்பிடறதுக்குபதிலா ஹோட்டலில் என்னோட சேர்ந்து சாப்பிடுங்க...

உங்களுக்கு நேரம் வீணாகாது... நான் உங்களோட பேசறதுக்கும் நேரம் கிடைக்கும்..."

"என்னோட பேசறதுக்கு என்ன இருக்கு...? ஒருத்த ரோட பாராட்டில் உக்காந்து குளிர்காயற சுகத்தை நான் விரும்பமாட்டேன்..."

"இல்லை துங்கபத்ரா... உங்களைப் பாராட்டிப் பேசறதுக்காக மட்டும் நான் வரலை... உங்கிட்டே ஒரு ஆப்ளிகேஷன் கேக்க வந்திருக்கேன்..."

"ஆப்ளிகேஷன்...?"

"ஆமா... உதவி கேக்கறதாவும் வெச்சிக்கலாம்... அல்லது உங்களைப்போல ஒருதிறமையானபெண்ணின் சர்வீஸைப் பயன்படுத்திக்க விரும்பறேன்னும் வெச்சிக்கலாம்..."

நெற்றி சுருங்கசற்று நேரம் யோசித்தது துங்கபத்ரா - சில மவுனவிநாடிகளுக்குப்பின்பு தலையசைத்தாள்.

"வாங்க பேசலாம்..."

அவன்முகத்தில் புன்னகை பிரகாசமாய் உதித்தது.

"தேங்க்யூ வெரிமச்..."

ஐம்பதடி தூரம் நடந்த பின் - அந்த ஹோட்டலின் படிகளில் ஏறினார்கள்.

சற்றே கூட்டம் குறைவாய் இருந்த ஏசி பிரிவிற்குள் அவளை அழைத்துச் சென்றவன் - கேட்டான்.

"உங்களுக்கு ஆட்சேபணை இல்லைன்னா அந்த ஃபேமிலிரூமில் உக்காந்துக்கலாம் துங்கபத்ரா... நம்மை யாரும் தொந்தரவு பண்ணமாட்டாங்க... ஃப்ரீயா பேசலாம்..."

"சரி..."

கழுத்தளவுகதவைத்தள்ளிக்கொண்டு உள்ளேசெல்ல - கதவு தானாகவே சாத்திக்கொண்டது.

எதிரெதிர் நாற்காலிகளில் அவர்கள் அமர்ந்து கொண்டபோது - பேரர் வந்து நின்றார்.

ஆர்டர் செய்துவிட்டு அவளிடம் திரும்பினான்.

"துங்கபத்ரா...! என்னைப் பத்தி உங்கிட்டே அறிமுகம் பண்ணிக்கறேன்..."

அவள் நிமிர்ந்து அவனைப் பார்க்க - அவனிடம் இருந்து வார்த்தைகள் தொடர்ந்தன.

"என் பேர் டேனியல்... நானும் என் ப்ரெண்ட்ஸும் குழுவா செயல்பட்டுட்டிருக்கோம்... நீங்க நேத்திக்கு

மேடையில் என்ன பேசினிங்களோ... அதனோட செயல் வடிவமா நாங்க இருக்கோம்..."

"நீங்க சொல்றது புரியலை..."

"சட்டம் தன்னோட வேலையைச் செய்யமுடியாம கையைப் பிசைஞ்சுகிட்டு நிக்கறப்போ இளைஞர்கள் அந்தக்கடமையைஎடுத்துக்கணும்ன்னு பேசினிங்களே... அதைத்தான் நாங்க எடுத்துக்கிட்டிருக்கோம்... மும்பை ரயிலை வெடிக்க வெச்சது நாங்கதான்..."

தட்டென்று நிமிர்ந்தாள் துங்கபத்ரா.

"ஆயிரக்கணக்கான உயிர்களை பலி வாங்கிய அந்த ரயில் விபத்துக்கு நீங்கதான் காரணமா...?"

"ஆமா..."

"எதுக்காக இந்த வெடி விபத்து...?"

"கடமைகளை செய்ய மறந்து இருபத்திநாலு மணி நேரமும் அரசியல் பண்ணவே நேரத்தை செலவழிச்சிக் கிட்டு இருக்கும் மத்திய அரசுக்கு தலைவலி தர்றதுக்காகத்தான் அந்த கோரமான ரயில் விபத்தை ஏற்படுத்தினோம்..."

"அதுக்காக அப்பாவி ஜனங்களை பலி வாங்கறதை என்னால ஏத்துக்கமுடியலை..."

"யார் அப்பாவி ஜனம் துங்கபத்ரா...? அந்த ரயிலில் போகிற ஜனங்களில் அப்பாவி ஜனம் இருபத்தஞ்சு சதவீதம் கூட இருக்கமாட்டாங்க..."

"நீங்க சொல்றது புரியலை..."

"படிச்சிட்டு நமக்கேன் வம்புன்னு ஒதுங்கியிருக்கிற மக்களை நீங்க நேத்திக்கு மேடையில் சாடினிங்களே... அவங்கதான் அந்த ரயிலில் அதிகமா இருப்பாங்க... நாட்டில் நடக்கிற அநியாயங்களையும் அட்ரூசியங் களையும் தனக்கு சம்பந்தமில்லாதது போல பார்த்துக் கிட்டுதான், தன் குடும்பம், தன் பிசினஸ்ன்னு சுயநலத் தோட வாழற ஜனங்கதான் அந்த ரயிலில் அதிகபட்சமா இருந்திருப்பாங்க... அப்படிப்பட்ட எருமை மாட்டு ஜனங்களுக்கு தண்டனை... மத்திய அரசுக்கு தலைவலி... ஒரே கல்லில் ரெண்டு மாங்காய்..."

துங்கபத்ரா ஆச்சர்யமாய் அவனைப் பார்த்தாள்.

"இப்டி ஒரு கோணத்தில் நான் யோசிச்சதே இல்லை... நீங்க சொல்றது நியாயமாகத்தான்படுது டேனியல்..."

அவன்சந்தோஷமாய்ப்புன்னகைத்தான்.

''எனக்குத் தெரியும்... எங்க பக்கத்து நியாயம் உங்களுக்கு நல்லாப் புரியும்ன்னு எனக்குத் தெரியும்...''

துங்கபத்ரா கேட்டாள்.

''என்கிட்டே ஏதோ ஆப்ளிகேஷன் கேக்கணும்ன்னு சொன்னிங்களே...?''

அவன் சிரித்தான்.

''எஸ்... அடுத்ததா நான் அதைப் பத்திதான் பேச வந்தேன்... உங்க சர்வீஸ் எங்களுக்குத் தேவை துங்கபத்ரா...''

''யூ மீன்...?''

''எங்க ஆப்ரேஷன்களை போல்டா முன்னின்று நடத்த உங்களை மாதிரி ஒருதைரியமான பொண்ணு வேணும்...''

''அதாவது...?''

''எங்க ஆக்ட்டிவிட்டீஸில் நீங்க ஈடுபடணும்... உங்க என்னங்களுக்கெல்லாம் வடிவம் கொடுக்க நாங்கல்லா விதமான உதவிகளையும் செய்வோம்... எங்க உதவியைப் பயன்படுத்திக்கிட்டு நீங்க இந்த தேசத்தில் யார் யாருக்கெல்லாம் பாடம் கத்துக் கொடுக்க நினைக் கிறிங்களோ... அவங்களுக்கெல்லாம் பாடம் கத்துக் கொடுக்கலாம்... கோர்ட் கேஸ்ன்னு நேரத்தையும் பணத்தையும் விரயம் பண்ணிட்டிருக்காம நீங்க நேரடியா உங்க கையால தண்டனையைத் தரலாம்...''

அவள் யோசித்துக் கொண்டிருக்க-

அவன் டிஷ்யூ பேப்பரால் கையைத் துடைத்துக் கொண்டே வார்த்தைகளைத் தொடர்ந்தான்.

''உங்களால நாங்க தர்ற ஆப்பர்சூனிட்டியைப் பயன்படுத்திக்காம இருக்க முடியாது... ஏன்னா அந்த அளவுக்கு வேகம் உங்க பேச்சில் தெரிஞ்சது... அவசரமில்லை... நிதானமா யோசியுங்க... இன்னிக்கு சாயந்தரம் ஆறு மணிக்கு நான் ஹோட்டல் அபேதா வாசல்ல வந்து காத்திட்டிருக்கேன்... எங்களோட சேர்ந்து வொர்க் பண்றதில் உங்களுக்கு சம்மதம்ன்னா அங்கே வந்து என்னை மீட் பண்ணுங்க... அதுக்கப்புறம் நான் உங்களுக்கு என்னோட மத்த ஃப்ரெண்ட்ஸை அறிமுகப்படுத்திவெக்கறேன்...''

பேர் கொண்டு வந்து வைத்த பில்லுக்குப் பக்கத்தில் ரூபாய்த் தாள்களை வைத்துவிட்டு எழுந்தான்.

''உங்களுக்கு காலேஜுக்கு டைமாச்சுன்னு

நினைக்கறேன்... ஸீயூ துங்கபத்ரா...''

'த்ரில்லான இந்த விளையாட்டில் இறங்கிப் பார்த்தால்தான் என்ன...?'

யோசித்துக் கொண்டிருந்தாள் துங்கபத்ரா.

சாயந்தரம்.

காலேஜ் வாசலைக் கடக்கும் முன்பாக ஸ்ப்லெண்டர் அவளோரம் உரசி நின்றது.

''ஹாய்... துங்கா...!''

யுவனின் குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தவள் - லேசாய்த் திகைத்தாள்.

அவன் கேட்டேவிட்டான்.

''என்ன துங்கா... யாரோ அழையா விருத்தாளியைப் பார்க்கிற மாதிரி என்னைப் பார்க்கிறே...?''

''இ... இல்லையே...?''

''என்கிட்டே எதையும் மறைக்க முடியாது... வழக்கமா என்னைப் பார்த்ததும் குப்ன்னு ஒரு பட்டாம்பூச்சி உன்னோட கன்னுக்குள்ளே பறக்கும்... இன்னிக்கு அது மிஸ்ஸிங்...''

துங்கபத்ரா பேச்சை மாற்ற முயன்றாள்.

''முக்காலமும் உணர்ந்த முனிவன்னு உனக்கு மனசுக்குள் நினைப்பா...?''

''சரி... சரி... பைக்ல ஏறு...''

''எதுக்கு...?''

''பேச்சுப் போட்டி முடிஞ்ச பின்னால ஒரு நாள் சினிமாவுக்குப் போகலாம்ன்னு எனக்கு நீ வாக்குக் கொடுத்திருந்தே...''

''இன்னிக்கு வேண்டாம் யுவன்...''

''ஏன்...?''

''உனக்கு வாக்குக் கொடுத்தது உண்மைதான்... ஆனா இன்னிக்கே போகணும்ன்னு என்ன இருக்கு...?''

''இன்னிக்குப் போக வேண்டாம்ன்னா ஏன் போகவேண்டாம்...?''

''காரணத்தை அவசியம் சொல்லணுமா...?''

''ஆமா...''

''எனக்கு ஒரு எங்கேஜ்மெண்ட் இருக்கு...''

''செமஸ்டர் பரீட்சைகளுக்கு இன்னும் நிறைய நாள் இருக்கு... அப்படி இருக்கிறப்போ உனக்கு என்னைவிட என்னம்மா முக்கியமான எங்கேஜ்மெண்ட்...? நீ யாரைப்

பார்க்கணும்..."

"அதைச் சொன்னா விட்டுடுவியா...?"

"ம்..."

"புது ஃப்ரெண்ட் ஒருத்தர் கிடைச்சிருக்கார்... அவரைப் பார்க்கப் போயிட்டிருக்கேன்..."

"பாய் ஃப்ரெண்டா... கேர்ள் ஃப்ரெண்டா...?"

"பாய் ஃப்ரெண்ட்தான்..."

"கிண்டலா...?"

"கிண்டல் இல்லை... நிஜமாத்தான்..."

"ஒக்கே... நானும் வர்றேன்... அவரை எனக்கு அறிமுகப்படுத்திவை..."

"ஸாரி... அதுஎன்னால முடியாது..."

"அப்போ நீ பொய் சொல்றே..."

"நிலுக்குத்தான்டா சொல்றேன்..."

"டா போட ஆரம்பிச்சிட்டே... அம்மாவுக்குக் கோபம் வர ஆரம்பிச்சிடுச்சுன்னு நினைக்கிறேன்... ஒக்கே... நான் உன்னை சினிமாவுக்குக் கூப்பிடலை... உன்னை எங்கே ட்ராப் பண்ணணும்னு சொல்லு... ட்ராப் பண்ணிடறேன்..."

"நீ எங்கேயும் ட்ராப் பண்ணவேண்டாம்... பஸ் பிடிச்சி நான் போய்க்கறேன்..."

"அட்லீஸ்ட் இந்த மகாராணியை பஸ் ஸ்டாப் வரைக்கும் கொண்டு போய்விடற யோகமாவது எனக்குக் கிடைக்குமா...?"

சலாம் போட்டபடி முதுகை வளைத்து அவன் கேட்க - வாய்விட்டுச் சிரித்துவிட்டாள் துங்கபத்ரா.

பில்லியனில் ஏறிக் கொண்டாள்.

பைக் ஒரு தடவை உறுமிவிட்டு ஜிவ்வென்று விரைந்து விநாடிகளில் அருகாமை பஸ் ஸ்டாப்பைத் தொட்டது.

அவள் பில்லியனைவிட்டு இறங்க இறங்கப் புன்னகைத்தபடியே சொன்னாள்.

"இதை... இதை... இதைத்தான் நான் எதிர்பார்த்தேன்..."

"எதை...?"

"அழகான துங்கபத்ரா என்னோட பைக்கில் வந்து இறங்குறதைப் பார்த்து பஸ் ஸ்டாப்ல நிக்கற ஒவ்வொருத்தனும் காதுல புகை விட்டுட்டிருக்கான்..."

"இப்படி ஒரு அல்ப சந்தோஷமா...? நாளைக்குப்

பார்க்கலாம் டியர்..."

அவனிடம் விடை பெற்றபோது - டவுன் பஸ் வந்து விட்டது.

முண்டியடித்த கூட்டத்தில் துங்கபத்ராவும் ஒருத்தியானாள்.

சற்றே கசங்கலான பத்து நிமிடப் பயணத்தின் முடிவில் - அந்த ஸ்டாப்பில் இறங்கிக் கொண்டாள்.

ஸ்டாப்பிங்கிற்கு நேரெதிர் திசையில் -

ஹோட்டல் அபேதா.

சாலையைக் கடந்து ஹோட்டலின் வாயிலைத் தொட்டபோது -

டேனியல் முன்னால் வந்து நின்றான்.

"ஹாய்... துங்கபத்ரா...!"

"ஹாய்...!"

"ஐயாம் வெரி ஹேப்பி... நீ வருவேன்னு நான் ஹண்ட்ரட் பர்சென்ட் எதிர்பார்த்தேன்... உன்னை இனிமே நான் தீன்னே கூப்பிடலாம் இல்லையா...?"

துங்கபத்ரா புன்னகைத்தாள்.

"ஷ்யூர்... யோசிச்சப் பார்த்தேன் டேனியல்... சும்மா மேடையில் பேசிட்டிருக்காதிங்க... செயல்ல இறங்குங்கன்னு மேடையில் நான் முழங்கிட்டு வந்தேன்... வீராவேசமா பேசின நான் செயல்பட ஒரு வாய்ப்பு கிடைக்கிறபோது அதைப் பயன்படுத்திக்கலைன்னா யாரை நான் சாடினேனோ அவங்க லிஸ்ட்டில் நானும் சேர்ந்துடுவேன்... அதனாலதான் ஆக்கபூர்வமாகளத்தில் இறங்கலாம்னு முடிவெடுத்தேன்..."

டேனியல் சந்தோஷமாய்ச் சிரித்தான்.

"குட்... அப்போ நாம நம்ம ஃப்ரெண்ட்ஸை சந்திக்கப் போகலாமா...?"

"அவங்க எங்கே இருக்காங்க...?"

"சிட்டி அவுட்டர்ல... பிரேமா நகர்..."

"இங்கிருந்து எப்படிப் போகப் போறோம்...?"

"கார் இருக்கு..."

சொல்லிக் கொண்டே சற்று தள்ளி நின்றிருந்த சாம்பல் நிற அம்பாஸடரை நோக்கி அவளைக் கூட்டிச் சென்றான்.

அவன் டிரைவிங் இருக்கையில் அமர்ந்து கொண்டு கதவைத் திறந்துவிட - தயக்கமாய் முன் சீட்டில் அமர்ந்தாள்.

கார் சாலைப் போக்குவரத்தில் நீந்திச் செல்ல ஆரம்பித்தது.

பதினைந்து நிமிஷப் பயணத்தின் முடிவில் - அந்த எக்ஸ்ட்டென்ஷன்ஸியாவுக்குள்நுழைந்துஅந்தவீட்டின் முன்னால்நின்றது.

"ப்ளீஸ்கம்துங்கபத்ரா..."

காரைவிட்டு இறங்கி - அவளை வரவேற்றான் டேனியல்.

அவள் தயக்கத்துடன் நடந்து வருவதைப் பார்த்துவிட்டுப்புன்னகைபூத்தான்.

"என்ன...?இவனைநம்பிவரலாமாவேண்டாமான்னு யோசிக்கறியாதுங்கபத்ரா...?எங்களுக்குஇருபத்திநாலு மணிநேரமும்செயல்திட்டங்கள்...செயல்கள்...பத்தினி சிந்தனைதான்மூளையைஆக்கிரமிச்சிருக்கும்....அதைத் தவிர வேற உணர்ச்சிகளுக்கு இடமே இல்லை... நீ தைரியமாஇந்தவீட்டுக்குள்வரலாம்..."

"நோ...நோ...உன்னையும்உங்கஃப்ரெண்ட்ஸையும் நான்நம்பறேன்டேனியல்..."

சமாளித்தலாய்ப் புன்னகைத்துவிட்டு - அந்த வீட்டுக்குள்நுழைந்தாள்.

உள்ளேசிலரின்நடமாட்டம்தெரிந்தது.

எதிர்ப்பட்ட ஒருவன் டேனியலைப் பார்த்து விஷ் பண்ணினான்.

"விநாயக்அண்ட்இப்ராஹிம்எங்கேஇருக்காங்க...?"

"அந்தரூமில்இருக்காங்கஸார்..."

அவன் கை காண்பித்த அறைக்குச் செல்ல - அங்கிருந்த இரண்டு இளைஞர்களும் திரும்பிப் பார்த்து புருவங்களைஉயர்த்தினார்கள்.

அவர்களின் பார்வை துங்கபத்ராவின் மேல் படர்ந்து திருந்தது.

"டேனியல்...?"

"துங்கபத்ரா.... நம்ம செயல் திட்டங்களில் ஈடுபட சம்மதம்தெரிவிச்சுவந்திருக்கா..."

அவர்கள்இருவரும்உதடுகளின்கோடியில்மெல்லிய ம்கிழ்ச்சிச் சிரிப்பை வெளியிட - டேனியல் துங்கபத்ரா விடம்திரும்பிஇருவரையும்அறிமுகப்படுத்தினான்.

"துங்கபத்ரா...!இவன்இப்ராஹிம்...இவன்விநாயக்... நாங்க மூணு பேரும்தான் மூளையா இருந்து ஒவ்வொரு

ஆப்ரேஷனையும் வெற்றிகரமா நடத்திட்டு வர்றோம்... இந்த நிமிஷத்திலிருந்து இந்த மூளையின் இன்னொரு அங்கமா நீயும் இணையறே...!"

அவர்கள் கைகளை நீட்ட - துங்கபத்ரா தன் கையை மேலே வைத்து அமுத்தினாள்.

"என் மேல நம்பிக்கை வெச்சு உங்க மூணு பேருக்கு இணையா என்னையும் சேர்த்துக்கிட்டிருக்கிங்க... உங்க நம்பிக்கையை நான் காப்பாத்துவேன்..."

இப்ராஹிம் சிரித்தான்.

"நம்ம அடுத்த ஆப்ரேஷனில் துங்கபத்ராவும் அங்கம் வகிக்கட்டும்..."

துங்கபத்ரா ஆர்வமாய்க் கேட்டாள்.

"உங்க அடுத்த ஆப்ரேஷன் என்ன...?"

"மத்திய அரசுக்கு இன்னொரு தடவை தலைவலி தரணும்..."

"அதுக்காக என்ன செய்யத் திட்டம் தீட்டிருக்கிங்க...?"

"கவர்னர் மாளிகையை கவர்னரோட சேர்த்து தரை மட்டமாக்கணும்..."

"திட்டம் எந்த அளவில் இருக்கு...?"

"துவக்க நிலையில்தான் இருக்கு..."

"கவர்னர் மாளிகைக்குள் எப்படி நுழையப் போறிங்கங்கறதில்தான் இந்த ஆப்ரேஷனின் உயிரே அடங்கியிருக்கு... இல்லையா?"

"யூ ஆர் கரெக்ட் துங்கபத்ரா..."

"அதுக்கு நான் ஒரு வழி சொல்றேன்..." துங்கபத்ரா சொல்லிவிட்டு புன்னகைத்தாள்.

7

போலீஸ் ஐ.ஜி புருவங்களை நெறித்தார்.

"அஜய்வர்மா...! இந்த பேப்பர்ல ஸ்வர்க்கபுரின்னு கிறுக்கலா எழுதியிருக்கே... இது... அந்த ஸ்வர்க்கபுரியைத் தான் குறிக்கிறதா...?"

"அதிலென்ன சார் சந்தேகம்...?"

"ஊர்ஜிதம் பண்ணிக்காம ஏனோ தானோன்னு நாம டெல்லிக்குத் தகவல் தரமுடியாது அஜய்வர்மா..."

"யூ ஆர் கரெக்ட் சார்... அதே சமயம் இப்போதைக்கு நமக்கு ஸ்பேஷ்டமான ஊர்ஜிதங்களை சேகரம் பண்ண

நேரம் கிடையாது... ஸ்வர்க்கபுரின்னு கிறுக்கியிருக்கிற இந்த எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடம் எந்த இடம்ன்னு யோசிச்சுப் பாருங்க சார்..."

"எஸ்... தீவிரவாதச் செயலுக்கு துணை போயிருக்கிற ஒருத்தனின் வீட்டை சோதனை போடறப்போ இது கிடைச்சிருக்கு... அதை வெச்சுப் பார்க்கும்போது... நாளைக்கு இந்தியாவுக்கு விஜயம் செய்ய இருக்கும் அமெரிக்க அதிபர் தங்கப் போகிற ஹோட்டல் ஸ்வர்க்கபுரியைத்தான் இது குறிக்கிறதுன்னு சந்தேகப் படறதுக்கு நிறையவே வாய்ப்பிருக்கு..."

"இந்த சந்தேகத்தை உடனடியா டெல்லிக்கு கன்வே பண்றதுதான் சரி சார்... என்னா... ரொம்ப அழகா திட்டமிட்டு... நமக்கு முன் கூட்டியே தகவல் கிடைச்சிருந்தும்... அதை முறியடிச்சு... ஆயிரக்கணக்கில் உயிர்களை பலி வாங்கும் விதமா ரயிலை வெடி வெச்சுத் தகர்த்த கோரக்கும்பலால இந்தியாவுக்கு விஜயம் செய்ய இருக்கும் அமெரிக்க அதிபரோட உயிருக்கு ஆபத்து இருக்கு..."

ஐ.ஜி ரிசீவரை எடுத்தார்.

"ஹலோ..." சொன்னடெலிபோன் ஆப்ரேட்டரிடம் -

"டெல்லி ஐ.ஜிக்கு கனெக்ட் பண்ணும்மா... வெரி அர்ஜெண்ட்..."

"ஓக்கே சார்..."

ரிசீவரைச் சாத்திய சற்று நேரத்திலேயே டெலிபோன் அலறியது.

"ஹலோ..."

"சார்...! டெல்லிலைன். பேசுங்க..."

சுவிட்சுகள் மாற்றப்படும் 'க்க், க்க்' சப்தத்துக்குப் பின் - டெல்லி ஐ.ஜியின் ஹிந்தித்தனமான "ஹலோ..." கேட்டது.

தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டவர் நேரடியாய் விஷயத்துக்கு வந்தார்.

"மும்பை ரயில் விபத்துக்குக் காரணமான தீவிரவாதி களால் ஹோட்டல் ஸ்வர்க்கபுரியில் தங்கப் போகும் அமெரிக்க அதிபருக்கு ஆபத்து ஏற்படும் வாய்ப்புள்ளது... அதற்கான ஆதாரங்கள் சிக்கியுள்ளன..."

"இஸிட்...? என்ன ஆதாரம்...?"

டெல்லி ஐ.ஜி சற்றே பரபரப்போடு விசாரிக்க - இவர்

விபரங்களைச் சொன்னார்.

''அவருக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் மிக விரிவாக செய்யப்பட்டுள்ளன... அதிபர் மாளிகை பாதுகாப்பு அதிகாரிகள் நம்மை விடவும் சுறுசுறுப்பாக பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருக் கிறார்கள்...''

''வாஸ்தவம்தான்... ஆனால் இந்தத் தீவிரவாதிகளை நாம் குறைத்து மதிப்பிட முடியாது... மும்பை ரயில் வெடிப்பதற்குசற்று நேரம்முன்புநடந்தநிகழ்ச்சிகள்பற்றி நீங்கள்அறிந்திருப்பீர்கள்என்று நினைக்கிறேன்...''

''எஸ்... எனக்குத் தெரியும்... வெடிகுண்டு வைக்கப்பட்ட தகவல் கிடைத்ததும்... ரயில் தரோவாக சோதனையிடப்பட்டது... ஒருசக்திவாய்ந்தவெடிகுண்டு கண்டுபிடிக்கப்பட்டு நிமூவ் செய்யப்பட்டது... ஆனால் அதையும் மீறி... ரயில் என்ஜின் டிரைவரை கைக்குள் போட்டுக்கொண்டு அவர்கள் ரயிலை வெடிக்க வைத்தார்கள்...''

''அதனால்தான்... நாம் மிக மிக விழிப்புடன் இருக்க வேண்டும் என்று சொல்கிறேன்... அமெரிக்க அதிபரின் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் வெள்ளை மாளிகை அதிகாரிகள் முதல் டெல்லி பாதுகாப்புப் போலீசார் வரை அனைவருக்கும் இந்த எச்சரிக்கைத் தகவல்சென்றுசேர்வதுநல்லது...''

''உடனடியாக நான் எல்லோருக்கும் தகவலை அனுப்பிவிடுகிறேன்...''

''எஸ்... ஏனென்றால் ஒரு வேற்று நாட்டு அதிப உயிருக்கு நம் நாட்டில் ஊறு விளைந்தால் அது நம்முடையதேசத்துக்குத்தாள்பெருத்தஅவமானம்...''

''அப்படிப்பட்ட அவமானம் ஏற்பட்டுவிடாமல் இருக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் முழுவீச்சில் உள்ளன...''

இருவரும் பரஸ்பரம் விடை பெற்றுக்கொண்டு ரிசீவர்களைச் சாத்தினார்கள்.

ஐஜி ஒரு பெருமூச்சோடு நிமிர்ந்து அஜய்வர்மாவிட சொன்னார்.

''தகவலை பாஸ் பண்ணியாச்சு... இனிமே அவங்க தலைவலி...''

டெல்லியில் நடக்க இருக்கும் விபரீதம் தெரியாமல் நிம்மதிப் பெருமூச்சுடன் இருவரும் விடை

பெற்றுக்கொண்டார்கள்.

8

செல்போனைக்கையில்பிடித்திருந்தவிநாயக்குமீ உற்சாகத்தோடு ஓடிவந்தான்.

''இப்ராஹிம்...! டேனியல்...! துங்கபத்ராவோட வாயில சர்க்கரையைப்போடு...''

அவர்கள்கேள்விக்குறியோடுஅவனைப்பார்த்தார்கள். துங்கபத்ராவும் அவனிடம் நிமிர்ந்தாள்.

''என்னாச்சு விநாயக்...? உன் திடீர் உற்சாகத்துக்கு என்னகாரணம்...?''

செல்போனைஅணைத்தபடியே அவன்சொன்னான்.

''கிரீஷ்போன்பண்ணினான்...''

''என்னவாம்...?''

''இன்னும்அரைமணிநேரத்தில்அவன்இங்கேவந்து சேர்ந்துடுவானாம்...''

''போனகாரியம்என்னாச்சு...?''

''சக்சஸ்... துங்கபத்ராசொன்னமாதிரிஃப்ளெக்சிபிள் ஆர்டிஎக்ஸ்லேயர்கிடைச்சிடுச்சு...''

டேனியலும், இப்ராஹிமும் அவளை ஆச்சர்யமாய்ப் பார்த்தார்கள்.

''எங்களுக்கே தெரியாத இந்தத் தகவல் உனக்கு எப்படித்தெரியும்துங்கபத்ரா...?''

அவள்புன்னகைத்தாள்.

''ஜெனரல் நாலெட்ஜ்...! ஒரு புத்தகத்தில் படிச்சது சமயத்தில்ஞாபகம்வந்தது...''

''நீகுடுத்தஇன்பர்மேஷன்எக்ஸலெண்ட்ஒன்...! ஆயுத வியாபாரிகளிடம்நாலுநாளாஅலைஞ்சதில்இன்னிக்கு அந்தஃப்ளெக்சிபிள்ஆர்டிஎக்ஸ்லேயர்கிடைச்சிடுச்சு... அதிலேயே சென்ஸாரோட சர்க்யூட் ப்ரிண்ட் பண்ணப் பட்டிருக்காம்... மூணு கிலோ மீட்டர் ரிமோட்ல இருந்துகிட்டு அந்த சென்ஸாரை இன்வோக் பண்ணலாம்...இதெல்லாம்அந்தஆர்டிஎக்ஸ்வஸ்துவை கிரீஷ் நேர்ல பார்த்துட்டு போன்ல எனக்குச் சொன்ன தகவல்கள்...''

அவர்கள்பேசிக்கொண்டிருந்தசற்றுநேரத்தில்கிரீஷ் வந்துவிட்டான்.

துங்கபத்ரா, இப்ராஹிம், டேனியல், விநாயக் நான்கு பேரும் அவனை ஆர்வத்துடன் சூழ்ந்தார்கள்.

கிரீஷ் தன்னிடமிருந்த ப்ரீஃப் கேசைக் கவனமாகத் திறந்து காண்பித்தான்.

ஒரு பிளாஸ்டிக் துணியைப் போல நீளமாய் இருந்த அந்த வஸ்து அமைதியாய்ப் ப்ரீஃப் கேஸுக்குள் உட்கார்ந் திருந்தது. லெட் சர்க்யூட் கோடுகள் சில்வர் மினுமினுப் போடு கொசகொசப்பாய் அந்த ஃப்ளெக்சிபிள் வஸ்துவின் மேல் ஓடியிருந்தன.

"ஜாக்கிரதை கிரீஷ்..."

விநாயக் எச்சரிக்க -

கிரீஷ் சிரித்தான்.

"இந்த ரிமோட்டின் மூலமா ஆர்டிஎக்ஸ் பட்டையை உயிர்ப்பிக்கும் வரைக்கும் இதை எப்படி வேணாலும் கையாளலாம்..."

டேனியல் பல்வரிசை மின்னச் சொன்னான்.

"நம்மை மாதிரி ஆட்களுக்கு இந்த ஆர்டிஎக்ஸ் பட்டை ஒருவரப்பிரசாதம்..."

"எஸ்... ஒளிப்பது சுலபம்... கனமான லெதர் ஜாக்கெட்டில்தான் மறைச்சுக் கொண்டு போகணும் என்கிற அவசியம் இல்லை..."

துங்கபத்ரா புன்னகைத்தாள்.

"இந்த ஆர்டிஎக்ஸ் பட்டையை தன் உடலில் மறைச்சிக்கிட்டு கவர்னரை சந்திக்கப் போகப்போகிற மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்..."

அவர்கள் எல்லோரும் கண்களில் டன்டன்னாய் கேள்விக் குறியோடு துங்கபத்ராவைப் பார்த்தார்கள்.

"நீ ஆரம்பத்திலிருந்தே இப்படித்தான் சொல்லிட்ட ருக்கே... இது எப்படி சாத்தியம் துங்கபத்ரா...?"

"சாத்தியமில்லாத எந்த விஷயத்தையும் நா பேசமாட்டேன்... ஃப்ளெக்சிபிள் ஆர்டிஎக்ஸ் பட்ட இருக்குன்னு நான் சொன்னப்ப ஆரம்பத்தில் நீங் நம்பலை... ஆனா இப்ப அதை நம்பறிங்களா...?"

"ஆமா..."

"அதுமாதிரித்தான் இதுவும்..."

"இரண்டு விஷயங்களையும் ஒரேமாதிரி எங்களாலேநார்கள். பார்க்கமுடியலை... இந்த மாநிலத்தின் எதிர்க்கட்சி தலைவரை நம்ம திட்டத்துக்கு எப்படி மசிய வெ

முடியும்...?"

துங்கபத்ராவின் உதடுகளில் மீண்டும் புன்னகை.

"தான் ஆர்டிஎக்ஸ் பட்டையை சுமந்துகிட்டுப் போறோம்ங்கற விஷயம் அவருக்கே தெரியாது... இந்த ஆப்ரேஷனில் அவரும் சேர்ந்துதான் பலியாகப் போறார்... ஏன்னா அவர்தானே மனித வெடிகுண்டு... நம்மைப் பொறுத்தவரைக்கும் ஒரே கல்லில் ரெண்டு மாங்காய்..."

"ஒரே கல்லில் ரெண்டு மாங்காயா...?"

"ஆமா... நம்ம எதிர்க்கட்சித் தலைவர் அவரோட பதவிக் காலத்தில் எவ்வளவு ஊழல் பண்ணியிருக்கார்ங் கறது நாடறிஞ்ச ரகசியம்... அப்பேர்ப்பட்டவர் கொஞ்சம்கூட மனசாட்சியே இல்லாம பண்ணும் அரசியல் ஸ்டண்ட்களில் ஒண்ணுதான் நாளான்னிக்கு அவர் கவர்னரை சந்திச்ச மறுகொடுக்கும் நிகழ்ச்சி... அந்த ஸ்டண்ட்டுக்கு அவரையே பலி ஆக்கப் போறோம்... இன்னொண்ணு கவர்னர் மாளிகையை ஸ்தம்பிக்க வெச்ச மத்திய அரசுக்குத் தலைவலி தரப் போறோம்..."

"எல்லாம் சரி துங்கபத்ரா... இதை எப்படி செய்யப் போறோம்...? எதிர்க்கட்சித் தலைவருக்கே தெரியாம அவரோட உடுப்பில் இந்த ஆர்டிஎக்ஸ் பட்டையை எப்படிப் பொருத்தப் போறோம்...?"

"ஒரு லட்ச ரூபாய் பணத்தோட இந்த ப்ரீஃப் கேசையும் எடுத்துக்கிட்டு யாராவது ஒருத்தர் என்னோட வாங்க..."

"எங்கே...?"

"அங்கே வந்தா நீங்களே தெரிஞ்சிக்கலாம்..."

இப்ராஹிமும், விநாயக்கும் டேனியலிடம் திரும் பினார்கள்.

"டேனியல்...!"

"என்ன...?"

"துங்கபத்ராகூட நீயே போய்ட்டுவா..."

அவன் தலையசைத்துவிட்டு அவளுடன் புறப் பட்டான்.

ஒரு பெட்டியில் கரன்சித் தாள்கள்.

இன்னொரு பெட்டியில் ஆர்டிஎக்ஸ் பட்டை.

அம்பாஸடரில் நிரம்பிக்கொண்டு பயணிக்க ஆரம்பித் தார்கள்.

துங்கபத்ரா சொன்ன வழிகளில் எல்லாம் கார் விரைந்து சென்றது.

சரியாய் இருபது நிமிஷங்கள்.

அந்த மினி பங்களா அருகில் வந்ததும் குரல் கொடுத் தாள் துங்கபத்ரா.

"டேனியல்...! காரை இப்படியே நிறுத்து..."

அவன் பிரேக்கை மிதிக்க - பங்களாவின் வாயிலில் தன் இயக்கத்தை நிறுத்திக் கொண்டது கார்.

இருவரும் உள்ளே சென்றார்கள்.

ஏசி ரூமுக்குள் அந்த கெச்சலான ஆசாமி கையில் கத்திரிக்கோலோடு தெரிந்தான்.

"மணி...! நான் பணத்தோட வந்திருக்கேன்..."

அவள் சொன்னதும் அந்த மணி டேனியலைப் பார்த்துவிட்டு கேட்டான்.

"இவர் யாரு...?"

"இவர் நம்ம ஆள்தான்..."

"எவ்வளவு பணம்...?"

"நீ கேட்ட படி லட்ச ரூபாய்..."

அந்த மணியின் கண்களில் ஆசை இருந்த அளவுக்கு பயமும் இருந்தது.

விழிக்கோளத்தை உருட்டியபடியே கேட்டான்.

"மாட்டிக்க மாட்டோமே...?"

"வெடிச்சச் சிதறி சுக்கு நூறாப் போயிடும்... உன்னை யாரும் சந்தேகப்பட மாட்டாங்க..."

"அப்படின்னா எதிர்க்கட்சித் தலைவர் கவர்னரைப் பார்க்கப் போறதுக்காக தயாரிக்கிற உடையில் கேன்வாஸ் துணிக்குப் பதிலா நீ தர்ற பட்டையை வெச்சத் தைச்சிடலாமா...?"

"என்ன கேள்வி இது...? அதுக்காகத்தான் உனக்கு சுளையா ஒரு லட்ச ரூபாய் கொடுக்கிறோம்..."

டேனியல் இன்னமும் குழப்பமான பார்வையிலேயே இருவரையும் பார்த்தான்.

"நீங்களன்ன பேசிக்கறிங்கன்னு எனக்குப் புரியலை..."

துங்கபத்ரா புன்னகையோடு அவனிடம் திரும்பினாள்.

"இந்த மினி பங்களாவில் டெய்லரிங் வேலைதான் நடந்துட்டிருக்கு... இவர்தான் நடத்திட்டு வர்றார்... சமூகத்தில் பெரிய ஆட்கள்தான் இவருக்குக் கஸ்டமர் கள்... இங்கே வந்து டிரஸ்தைச்சிக்கறது பிரபலங்களுக்கு ஒரு கவுரமான விஷயமாப் போயிடுச்சு..."

"அப்படின்னா எதிர்க்கட்சித் தலைவர் இங்கேதான்

டிரஸ்தைச்சிக்கறாரா...?"

"ஆமா..."

"அவரோட டிரஸ்சில் ஆர்டிஎக்ஸ் ஸ்ட்ரிப்பை வெச்சுத் தைக்கப் போறாரா...?"

"ஆமா..."

"துங்கபத்ரா...! உன்னோட திட்டத்தில் பெரிய ஓட்டை இருக்கு..."

"என்ன ஓட்டை.....?"

"எதிர்க்கட்சித் தலைவர் கவர்னரைச் சந்திக்கப் போறப்ப... இப்ப இவர் தைக்கப் போற டிரஸ்சைத்தான் போட்டுட்டுப் போவார்ன்னு என்ன நிச்சயம்...?"

"இந்தச் சின்ன விஷயத்தை நான் யோசிக்காமட்டேனா டேனியல்...? இவர் தைச்சுக் கொடுக்கப் போற டிரஸ்சைத்தான் அவர் போடப்போறார்..."

"எதை வெச்ச இவ்வளவு உறுதியா சொல்றே...?"

"கவர்னர் தார்த் இண்டியன்... அதனால அவரை அட்ராக்ட் பண்றதுக்காக... மகளூர் குடுக்கப் போறப்ப... நார்த் இண்டியன்ஸ்டைல்ல டிரஸ்சைப் போட்டுக்கிட்டுப் போய் அசத்த பிளான் பண்ணியிருக்கார் எதிர்க்கட்சித் தலைவர்..."

"அவரோட அரசியல் ஸ்டண்ட்ல இதுவும் ஒண்ணா...?"

"ஆமா... ஸோ அந்த டிரஸ்சை இன்னிக்கு சாயந்தரம் மணி டெலிவர் பண்ணனும்... அந்த டிரஸ்ஸுக்குள்ளே தான் ஆர்டிஎக்ஸ் பட்டையை வெச்சுத் தைக்கப் போறோம்... எதிர்க்கட்சித் தலைவர்கிட்டே அவ்வளவு ஸ்ட்ரிக்ட்டான சோதனைகள் இருக்காது... நம்ம ப்ளான் ஒர்க் அவுட் ஆயிடும்... எத்தனையோ தொண்டர்களின் உயிரை தியாகம்ங்கற பேரில் பலி வாங்கிய இவரே நாளைக்கு நமக்காக தன்னோட உயிரைத் தியாகம் பண்ணப்போறார்..."

டேனியல் அவளை ஆச்சர்யமாய்ப் பார்த்தான்.

"துங்கபத்ரா...! இவ்வளவு பர்ஃபெக்ட்டா உன்னால பிட்டங்கள் வகுக்க முடியும்ன்னு நான் நினைக்கவே இல்லை..."

அவன் பாராட்டைப் புன்னகையுடன் ஏற்றுக்கொண்ட துங்கபத்ரா - மணியிடம் பணத்தை ஒப்படைத்துவிட்டு இன்ஸ்ட்ரக்ஷன்களை வழங்கிவிட்டு விடை பெற்றாள்.

காரில் ஏறியபோது - தயக்கமாய் கூப்பிட்டாள் துங்கபத்ரா.

"டேனியல்...!"

"என்ன...?"

"அங்கேபாரு..."

ரியர் வியூ மிரரைக் காட்டினாள்.

ஒரு பைக் சைலன்சர் நிறையப் புகையைக் கக்கிக் கொண்டு விருட்டென்று விரைந்து கொண்டிருந்தது.

டேனியல் கேட்டான்.

"அதுயாரு...?"

"ஹெல்மட் போட்டிருப்பதால யாருன்னு அடையாளம் தெரியலை... நம்மை வாட்ச் பண்றான்னு தோணுது..."

"எப்படிச் சொல்றே...?"

"நாம வெளியேவந்து காரை ஸ்டார்ட் பண்றவரைக்கும் அவன் அங்கேதான் நின்னுட்டிருந்திருக்கான்..."

"வேற காரணத்துக்காகக்கூட அவன் நின்னுட்டிருந் திருக்கலாம்... எதேச்சையா நாம காரில் உட்கார்ந்த சமயம் அவன் பைக்கை ஸ்டார்ட் பண்ணிட்டுக் கிளம்பி இருக்கலாம்..."

அலட்சியமாய்ச் சொன்னான் டேனியல்.

ஆனால்-

துங்கபத்ராவின் முகப்பரப்பில் கவலையின் கெட்டியான நிழல் மையமிட்டு இருந்தது.

துங்கபத்ரா உட்பட எல்லோருமே டிவியின் முன்னால் ஆர்வமாய் உட்கார்ந்திருந்தார்கள்.

அந்தப்பரவேட்டி விசாலலில் எதிர்க்கட்சித்தலைவர் கவர்னரிடம் மகஜர் அளிக்கும் போராட்டத்தை லைவ் ரிலேயாகக் காட்டிக்கொண்டிருந்தார்கள்.

"இந்த ஆளை கவர்ரேஜ் பண்ணப்போற பாவத்துக்காக இந்த டிவி கேமராமேன்களும் சேர்ந்து பலியாக வேண்டியிருக்கு..."

சொன்ன துங்கபத்ராவைப் பார்த்துச் சிரித்தான் டேனியல்.

"போர்முனையில் நின்னுக்கிட்டு எதிரி சாகறதைப் பத்திப் பரிதாபப்படக்கூடாது துங்கபத்ரா..."

"எதிரிக்காகப் பரிதாபப்படலை... அப்பாவி கேமராமேன் களுக்காகப் பரிதாபப்பட்டேன்..."

"கலைபெடுக்கும்போது கதிரும் கொஞ்சம் அறுபடத்

தான் செய்யும்..."

விநாயக் குறுக்கிட்டு இருவரையும் அடக்கினான்.

"இப்போ இந்த அநாவசியமான பட்டிமன்றம் எதுக்கு...? வாட்ச் திஸ் ப்ரொக்ராம்... கிரீஷ் ஆன்லைன்ல இருக்கானா...?"

"ஆமா... கவர்னர் மாளிகைக்குப் பக்கத்தில்தான் ஆர்டிஎக்ஸ் ஸ்ட்ரிப்பை இயக்கக்கூடிய ரிமோட் கன்ட்ரோலோட நின்னுட்டிருக்கான்... செல்போன்ல நம்ம உத்தரவுக்காகக் காத்திட்டிருக்கான்... ஆன்-ஐ சொன்னா ரிமோட் கன்ட்ரோல் பொத்தானை ஆன் பண்ணிடுவான்... எதிர்க்கட்சித் தலைவர் தானும் வெடிச்சு... மத்தவங் களையும் சிதறடிச்சுடுவார்..."

"இப்படதானே எதிர்க்கட்சித் தலைவரின் கார் கவர்னர் மாளிகைக்குள் பிரவேசமாயிருக்கு..."

டிவியின் செவ்வகத்தில் அந்த வெள்ளை நிறக் கார் கவர்னர் மாளிகையை ஒட்டி இருபுறமும் கூடியிருந்த கட்சித் தொண்டர்களின் கையசைப்பு. கொடியசைப்பு. ஆரவாரங்களுக்கு மத்தியில் புகுந்து கவர்னர் மாளிகை யின் பிரம்மாண்ட கிரீதி கேட்டுக்குள் நுழைந்தது.

பானட்டின் முன் நுனியில் கட்சிக் கொடி, அறுபட்ட பல்லியின் வாலைப்போல துடிதுடித்தது.

கார் போர்டி கோவைத் தொட்டு நிற்க - யாரோ ஓடி வந்து காரின் கதவைத் திறந்துவிட்டார்கள்.

கையைக் கூப்பிக்கொண்டே - எதிர்க்கட்சித்தலைவர் புதிதாய்த் தைத்த வடக்கத்தி உடையுடன் கீழே இறங்கினார்.

டேனியல் செல்போனில் கிரீஷை அலர்ட் செய்தான்.

"கிரீஷ்...!"

"ஸார்...!"

"பீரெடி... அவர் உள்ளே போய்ட்டார்..."

"நான் தயாராய்க் காத்திட்டிருக்கேன் ஸார்..."

எதிர்க்கட்சித்தலைவர் கவர்னரின் அலுவலகத்துக்குள் சென்றதும் - கவர்னர் சம்பிரதாயமாய் அவரை வரவேற்றார்.

இருவரும் ஒன்றாய் நின்று பரஸ்பரம் புன்னகைத்துக் கொண்டார்கள்.

சில விநாடிகளுக்கு போட்டோ ஃப்ளாஷ்கள் மின்னிக் கொண்டே இருந்தன.

எதிர்க்கட்சித் தலைவர் தன் கையிலிருந்த மகஜரை

கவர்னரிடம் ஒப்படைத்தார்.

அதன்பின் இருவரும் சோபாவில் அமர்ந்தார்கள்.

விநாயக் சொன்னான்.

"டேனியல்...! திஸ் ஈஸ் தரைட்டைம்... கிரீஷ்கிட்டே ரிமோட்டை ஆன் பண்ணச் சொல்லு..."

டேனியல் செல்போனில் அவனைக் கூப்பிட்டான்.

"கிரீஷ்...!"

"ஸார்...!"

"ஆன் இட்..."

"ஓக்கே ஸார்..."

எல்லோரும் நகங்களைக் கடித்தபடி டிவியையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

சின்னத் திரையின் செவ்வகம் ஒரு ஆங்கிலப் படக்ளைமாக்ஸ் காட்சியைப்போல தீப்பிழம்புகளாய்க் கக்கப் போகிறது...

விநாடிகள் வழிந்தன.

1...

2...

3...

4...

5...

நான்கு பேரும் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

"டேனியல்...! விநாடிகளுக்குள் எல்லாம் நடந்தி ருக்கணுமே...? என்னப்ராப்ளம்...?"

"அதான் எனக்கும் புரியலை..."

சொல்லிக் கொண்டே இன்னமும் உயிருடன் இருந்த செல்போனில் கிரீஷைக் கூப்பிட்டான்.

"கிரீஷ்...! கிரீஷ்...!"

"ஸார்...!"

"என்னாச்சு...? ரிமோட்டை ஆன் பண்ணினியா...?"

"பண்ணிட்டேன் ஸார்..."

"அங்கே ஒண்ணுமே ஆகலை... மறுபடியும் ட்ரை பண்ணு...க்விக்..."

"நாலைஞ்சு முறை ஆன் பட்டனை அமுத்திட்டேன் ஸார்..."

"ரிமோட் வேலை செய்யலையா...? அல்லது ஆர்டி எக்ஸ் ஸ்ட்ரிப் வேலை செய்யலையா...? என்னப்ராப்ளம்...?"

டேனியல் குழப்பமாய்க் கேட்டபோது -

இப்ராஹிம் அவனுடைய தோளைத் தட்டினான்.

"டேனியல்...! டிவியைப் பாரு..."

திரையின் கீழ்ப் பகுதியில் ஃப்ளாஷ் நியூஸ் வேகமாய் ஓடிக்கொண்டிருந்தது.

'எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் கவர்னரை வெடிகுண்டு வைத்துக் கொல்ல சதி... கடைசி நிமிடத்தில் துப்புக் கிடைத்ததால் பயங்கரம் தவிர்க்கப்பட்டது... பிரபல டெய்லர் ஒருவர் கைதாகி இருக்கிறார்... அடையாளம் தெரியாத ஒரு பெண் உட்பட சதிக் கும்பலை போலீஸ் தேடிவருகிறது...'

விநாயக் அலறினான்.

"மை காட்னஸ்...! விஷயம் லீக் ஆயிடுச்சு..."

துங்கபத்ரா பரபரத்தாள்.

"முதல்ல கிரீஷை இங்கே வரச் சொல்லுங்க... போலீஸ் அந்தப் பிராந்தியத்தையே உலுக்கிப் பார்த்துட்டிருப் பாங்க... இவன் மாட்டிக்கிட்டான்னா நாம கூண்டோட மாட்டிக்க வேண்டியதுதான்..."

டேனியல் கிரீஷுக்கு உத்தரவளித்துக் கொண்டிருக்க - இப்ராஹிம் கவலையோடு கேட்டான்.

"துங்கபத்ரா...! உன்னை அந்த டெய்லருக்குத் தெரியுமா...?"

"நான் யாரு, என்னன்னு தெரியாது... ஆனா அவனோட நான் இந்த விஷயத்தில் டீல் பண்ணினதால என்னை நேரில் பார்த்தா அடையாளம் சொல்லிடுவான்..."

"எங்கே தப்பு நடந்தது...? டெய்லர் பயந்துபோய் போலீசில் சரண்டர் ஆகியிருப்பானா...?"

"நெவர்... அவனுக்கென்ன பைத்தியமா...? போலீஸ் அவனைத் தேடிப்போய் அரெஸ்ட் பண்ணியிருக்காங்க..."

"ஆர்டி எக்ஸ் பட்டனை வேலை செய்யாம மூடக்கி இருப்பாங்களா...?"

"இட் மேபி..."

சேனலை மாற்றிக் கொண்டிருந்த இப்ராஹிம் அந்த ஸ்பெஷல் நியூஸ் எடிஷனைப் பார்த்துவிட்டுச் சொன்னான்.

"ஆர்டி எக்ஸ் ஸ்ட்ரிப்பை டெய்லர் அந்த உடையில் பொருத்தறதுக்குமுந்தியே அவனை அரெஸ்ட் பண்ணிட் டாங்க... பரபரப்பு ஏற்பட்டுடக் கூடாதுங்கறதுக் காக

விஷயத்தை இவ்வளவு நேரமா அமுக்கி வெச்சிருந்து கவர்னர் எதிர்க்கட்சித் தலைவர் சந்திப்பு முடிஞ்ச பிறகு நியூஸை வெளியே விட்டிருக்காங்க..."

"எப்படி போலீசுக்கு விஷயம் போச்சு...?"

துங்கபத்ரா சொன்னாள்.

"டேனியல்...! நாம ஒரு மோட்டார்பைக் ஆசாமியைப் பார்த்தோமே..."

"யார் அவன்...?"

"நம்ம ஆட்களில் ஒருத்தனாக்கூட இருக்கலாம்... அந்த உறுத்தல் ஏற்பட்டதுமே இங்கிருக்கிற எல்லா டெலி போன் பாயின்ட்களிலும் யார்க்கும் தெரியாம ரகசியமா ரெக்கார்டர் பொருத்தச் சொன்னேனே... விநாயக்... பொருத்தினியா...?"

துங்கபத்ராவைப் பார்த்து விநாயக் தலையசைத்தான்.

"நம்ம ஆட்களையே நாம சந்தேகப்படறதான்னு எனக்கு முதல்ல தயக்கமாத்தான் இருந்தது... இருந்தாலும் துங்கபத்ராவின் வார்த்தைக்கு மதிப்பளிச்சு பொருத் திட்டேன்..."

"இந்த இருபத்திநாலு மணி நேரத்தில் பதிவான கேஸட்களை கலெக்ட் பண்ணிட்டு வா... போட்டுப் பார்க்கலாம்..."

அடுத்த சில நிமிஷங்களில் கேஸட்கள் கொண்டு வரப்பட்டன.

ஒரு சின்ன டேப் ரிக்கார்டரில் ஒவ்வொரு கேஸட்டாகப் போட்டுக் கேட்க ஆரம்பித்தார்கள்.

டெலிபோன்காள்வர்ஸேஷன்களில் பதிவாகியிருந்தன.

ஐந்தாவது டெர்மினலில் பொருத்தியிருந்த கேஸட்டி லிருந்து அந்தப் படபடப்பான குரல் கேட்டது.

"ஆமர் ஸார்... அந்த டெய்லரை மடக்கி உதைச் சிங்கள்ளா விஷயம் வெளியே வரும்..."

"...."

"தான் இப்ப கொஞ்ச நேரத்துக்கு முன்னால அவங்களை பைக்கில் ஃபாலோ பண்ணி பார்த்துட்டு வரேன் ஸார்..."

"...."

"நோ ஸார்... இது வரைக்கும் என் மேல இங்கே யார்க்கும் சந்தேகம் இல்லை... புதுசா ஒரு பொண்ணு வந்திருக்கா... அவளை நினைச்சாத்தான் பயமா இருக்கு...

இனிமே இங்கிருந்துதாம அடிக்கடி பேசவேண்டாம் ஸார்... வெச்சிடறேன்..."

இந்த உரையாடலைக் கேட்கக் கேட்க -

இப்ராஹிம், டேனியல், விநாயக் மூன்று பேரின் கண்களும் சொரிப் பழம் போல் சிவக்க ஆரம்பித்தன.

துங்கபத்ரா கேட்டாள்.

"உங்க ஆட்களோட குரல்கள் எனக்கு அவ்வளவா பரிச்சயம் இல்லை... இது யாரோட குரல் டேனியல்...?"

"கிரீஷ்...!"

இப்ராஹிம் கத்தினான்.

"ரிமோட் ஆன் ஆகலைன்னு என்னமா நடிச்சான்...? அந்த ராஸ்கலை துப்பாக்கியால துளைச்சு எடுக்கணும்"

"இப்போ வந்துடுவான்... பிஸ்டலை லோட் பண்ணிவை இப்ராஹிம்..."

சொல்லச் சொல்ல -

கிரீஷ் வந்துவிட்டான்.

"ஸார்...! என்னப்ராப்ளம்ன்னு தெரியலை... நான் பல தடவை ரிமோட்டை ஆன் பண்ணியும்... ஃபயர் ஆகவே இல்லை..."

அப்பாவியாய் முகத்தை வைத்துக்கொண்டு பேசியவனுக்கு நேராக பிஸ்டலைப் பிடித்தான் இப்ராஹிம்.

"இப்போ கலெக்ட்டா ஃபயர் ஆகும் பாரு..."

அவன் திடுக்கிட்டு -

"ஸ... ஸார்...!"

- என்று பின்வாங்கியபோது - இப்ராஹிம் ட்ரிக்கரை அமுத்தியிருந்தான்.

சைலன்சர் பிஸ்டல் சின்னதாய்த் தும்மியது.

சரிந்து விழுந்த கிரீஷின் இருதயப் பகுதியிலிருந்து ஒரு ரத்தப் பைப் திறந்து கொண்டது.

9

டெல்லி.

ஹோட்டல் ஸ்வர்க்கபுரி.

அமெரிக்க அதிபருக்கான செக்யூரிட்டி வலையில் தினறிக் கொண்டிருந்தது அந்த ஹோட்டல்.

அங்கே அத்தனை அசைவுகளும் பதிவாகிக்

கொண்டிருந்தன.

யாராவது தேவையில்லாமல் குனிந்தால்கூட சந்தேகப் பார்வைகள் தீண்டின.

ரிசப்ஷனை ஒட்டி இருந்த செக்யூரிட்டி செல்லில் சைன் பண்ணிக்கொண்ட பின்புதான் ஹோட்டலில் தங்கியிருப்பவர்கள்கூட உள்ளே போகமுடியும்.

இந்த நிமிஷம் - அந்த செக்யூரிட்டி செல்லில் - அந்த இளைஞன் தன்னுடைய அடையாள கார்டைக் காட்டிய படி நின்றிருந்தான்.

செக்யூரிட்டி அதிகாரி அவனை ஏளனமாய்ப் பார்த்தார்.

"பத்திரிகை நிருபரா...?"

"ஆமாம்..."

"பத்திரிகை நிருபர்கள் யாருக்கும் அனுமதி இல்லை... அதிபர் பத்திரிகையாளர் சந்திப்புக்காக தனியாக நேரம் ஒதுக்கி இருக்கிறார்... அப்போதுதான் நீங்கள் அவரை பேட்டி எடுக்க முடியும்... தனிப் பேட்டி எதையும் தர அவர் ஒப்புக் கொள்ளவில்லை..."

அந்த இளைஞன் புன்னகைத்தான்.

"ஸாரி... என்னிடம் அதிபரின் அப்பாயின்மென்ட் இருக்கிறது... எங்கள் பத்திரிகைக்குப் பேட்டி அளிக்க அதிபர் ஒப்புக்கொண்டிருக்கிறார்... எட்டு மணிக்கு வரச் சொல்லியிருக்கிறார்... எட்டு மணியாக இன்னும் ஐந்து நிமிஷங்கள் இருக்கின்றன..."

பாதுகாப்பு அதிகாரிகள் ஆச்சர்யமாய் நிமிர்ந்தார்கள்.

"அதிபர் உங்களுக்குப் பேட்டி தர ஒப்புக்கொண்டிருக்கிறாரா...?"

"ஆமாம்..."

"எங்களுக்கு எந்தத் தகவலுமே இதுவரை வரவில்லையே...? அதற்கான அத்தாட்சிக் கடிதம் உங்களிடம் உள்ளதா...?"

நிருபர் இளைஞன் ஸ்வெட்டருக்குள் கையை நுழைத்து பாக்கெட்டிலிருந்து அந்தக் கடிதத்தை எடுத்துக் கொடுத்தான்.

அதைப் படித்துப் பார்த்துவிட்டுப் புன்னகைத்தார் அந்த அதிகாரி.

"ஓ... பதினேழாம் எண் குட்டில் தங்கியிருக்கும் அரிஜோனா நாட்டு அதிபரை பேட்டி எடுக்கப் போகிறீர்களா...? இதை நீங்கள் முதலிலேயே சொல்ல

வேண்டாமா...?"

நிருபர் இளைஞன் சிரித்தான்.

"அதிபர் என்றால் அமெரிக்க அதிபர் மட்டும்தானா...? இவரும்தான் வெளிநாட்டிலிருந்து வருகை தந்திருக்கிறார்... நாளை முக்கியமான ஒரு ஒப்பந்தத்தில் இந்திய அரசாங்கத்துடன் கையெழுத்துப் போட இருக்கிறார்... இவரைப் பேட்டி எடுக்கத்தான் நான் வந்திருக்கிறேன்..."

அவன் உடைமைகள் சோதனையிடப்பட்ட பின்பு - வழிவிட்டார்கள்.

"நீங்கள் சூட் நம்பர் பதினேழுக்குச் செல்லலாம்..."

நிருபர் இளைஞன் லிஃப்ட்டில் அடங்கி அடுத்த ஃப்ளோரில் விடுதலையானான்.

அந்த சூட்டுக்கும் பலத்த பாதுகாப்பு இருந்தது.

இன்னொரு சோதனைக்குப் பிறகு அவன் அறைக்குள் அனுமதிக்கப்பட்டான்.

தலையில் முக்காடு போட்டு கோட் மாதிரியான லினோத உடையிலிருந்த அரிஜோனா அதிபர் சோபா நிறைய உட்கார்ந்திருந்தார்.

அவனுக்கு இருக்கையைக் காட்டி அமரச் சொன்னார்.

"உட்காருங்கள்..."

அவன் உட்கார்ந்த பின்பு கொட்டாவியை அடக்கிக் கொண்டே சொன்னார்.

"உங்களுக்குப் பேட்டி கொடுக்க நேரம் கொடுத்திருந்ததையே நான் மறந்துவிட்டேன்... சற்று முன்பு செக்ரட்டரி ஞாபகப்படுத்தினார்... மிகவும் களைப்பாக இருக்கிறேன்... பேட்டியைச் சீக்கிரம் முடித்துக் கொண்டால் நல்லது எனத் தோன்றுகிறது..."

"எஸ்... ஸார்..."

கையாக்க டேப்ரிக்கார்டரை ஆன் பண்ணிக்கொண்டு கேள்விகளை ஆரம்பித்தான்.

"உங்கள் இந்திய விஜயம் எத்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்று நினைக்கிறீர்கள்...?"

"அமெரிக்க அதிபரில் விஜயத்துக்கு ஈடான ஒன்று... ஆனால் பணக்கார தேசத்தின் அதிபரின் வருகையும் என்னுடைய வருகையும் ஒரே தேதியில் அமைந்து விட்டதால் பரபரப்பெல்லாம் அங்கே போய்விட்டது... அரசு அளவில் மட்டுமே என் வரவின் முக்கியத்துவத்தை உணர்ந்திருக்கிறார்கள்... ஆனால் இந்தியப் பத்திரிகைகள்

என்றுடைய விஜயத்தைப் பின்தள்ளிவிட்டார்கள்என்று தோன்றுகிறது..."

"இந்தியப் பத்திரிகையுலகம் சார்பாகநான்வந்திருக்கி றேன் என்று எடுத்துக் கொள்ளுங்கள்... உங்கள் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சிற்சில இடங்களில் போராட்டம் நடந்திருக்கின்றன... எங்கள்பத்திரிகையில் அதுபற்றி செய்தி வெளியிட்டிருக்கிறோம்... அதன் தொடர்ச்சியாகத்தான் உங்களைப் பேட்டி காண வந்திருக்கிறேன்... எதனால் இந்த எதிர்ப்பு...?

அந்த அதிபர் நீளமாய்ப் புன்னகைத்தார்.

"இந்த எதிர்ப்பு எதிர்பார்த்த ஒன்றுதான்... அமெரிக்க அதிபர் இதே தேதியில்வரவில்லைஎன்றால்உங்கள்நாடு முழுவதும் என்னைப் பற்றித்தான் பரபரப்பாய்எதிர்த்துப் பேசிக்கொண்டிருப்பார்கள்..."

"என்னகாரணம்...?"

"தெரிந்தே கேட்கிறீர்கள்என்று நினைக்கிறேன்... என் வாயால் பதில் வரவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்... சொல்கிறேன்... இவ்வளவு காலமாக உலக அரங்கில் இந்தியாவை பலமாக எதிர்த்துப் பேசி வந்தவன் நான்... சிறுபான்மையினருக்கு எதிரானது இந்திய அரசு என்று குரல் கொடுத்து வந்தேன்... இதுபற்றிய என் அபிப்ராயம் தவறு... இந்தியா சிறுபான்மை மக்களின் பாதுகாவல னாகத் திகழ்கிறது... என்பதை சமீபத்தில்தான் உணர்ந் தேன்... அதன்பலனாக இந்தியாவுடனானஎனது நட்பை வளர்த்துக் கொள்ள விரும்பினேன்... இந்தியாவுக்கு ஒரு மிகப்பெரிய இன்டஸ்ட்ரியல்ப்ராஜெக்ட்டைக்கொண்டு வந்திருக்கிறேன்... இதன் மூலம் நாங்களும் பயனடைவோம்... இந்தியாவும் பயனடையும்..."

"என்னப்ராஜெக்ட்அது...?"

"இந்தியா வழியாக சில நாடுகளுக்கு எங்கள்நாட்டில் உற்பத்தியாகும் பெட்ரோலியப் பொருட்களை குழாய் வழியாகக் கொண்டு செல்லத் திட்டம் தீட்டியிருக்கி றேன்... அதற்கு இந்தியாவின் ஒப்புதலைப் பெறவும் அதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திடவுமே இந்தச் சந்திப்பு..."

சொல்லிக்கொண்டேஇன்னொரு முறை கொட்டாவி விட்டவர் - கண்களைக் கசக்கிக் கொண்டே - செக்ரட்டரியைப் பார்த்துச் சொன்னார்.

"நான் வழக்கமாய் கண்ணில் விட்டுக் கொள்ளும் ஐ ட்ராப்சை எடுத்து வா... அதை போட்டுக்கொண்டு படுத்தால்தான்காலையில் தெளிவாகஇருக்கும்..."

செக்ரட்டரி அந்த ஐட்ராப்சை அரிஜோனா அதிபரின் கண்ணில்விட - நிருபர்இளைஞன்எழுந்து கொண்டான்.

"நீங்கள் மிகவும் களைப்பாக இருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன்... ஒரு சில புகைப்படங்களை எடுத்துக் கொண்டு பேட்டியைமுடித்துக் கொள்கிறேன்சார்..."

சிறிய கேமராவை உறையிலிருந்துபிரித்து அவரைசில் கோணங்களில்க்ளிக் பண்ணிவிட்டு விடை பெற்றான்.

"தேங்க்யூ ரிப்போர்ட்டர்... ஒப்பந்தத்தில் கையெழுத் திட்ட பின் நேரம் இருக்குமானால் ஃப்ரெஷ்ஷாக ஒரு பத்து நிமிஷம் நாளை ஒதுக்கித் தரச் சொல்கிறேன்..."

"களைப்பைப் பொருட்படுத்தாமல் பேட்டி கொடுத்து ஒத்துழைத்ததற்கு நான்தான் உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும்சார்..."

விடை பெற்றான்இளைஞன்.

வராந்தாவைக் கடந்து - டாய்லெட்டில் இயற்கை உபாதையைத் தணித்துக் கொண்டு - மீண்டும் லிஃப்ட்டில்பயணித்துக்கீழே வந்தான்.

செக்யூரிட்டி செல்லைக் கடக்கிறபோது - அங்கே சின்னப்பரபரப்புஉதயமாகியிருந்தது.

செக்யூரிட்டி ஆபீசர்களின்பரபரப்பானநடமாட்டத்தை வேடிக்கை பார்த்தபடியே செல்லைக் கடக்க முயன்ற போது - ஒரு அதிகாரி வேகமாய் அவனிடம் வந்தார்.

அவனைத் தோளைப் பற்றி நிறுத்தினார்.

"நீதானே அரிஜோனா அதிபரை பேட்டிகாணச் சென்ற நிருபர்...?"

"ஆமாம்..."

அவர்கத்தினார்.

"ரவுண்ட்அப்ஹிம்..."

திடுத்திடுவென சில அதிகாரிகள் அவனைச் சுற்றி வளைத்தார்கள்.

அவன்குழப்பமாய்க் கேட்டான்.

"சார்...!வாட்ஸ்கோயிங்ஆன்...?"

அதிகாரி அவனைத் திருப்பிக் கேட்டார்.

"சொல்லு... அரிஜோனா அதிபர்சார்தற்காகக் கொலை செய்தாய்...?"

"என்ன...?"

"அவர் திடீரென இறந்துவிட்டார்... உன் மேல் சந்தேகப்பட்டு அவருடைய செக்ரட்டரி எங்களுக்குத் தகவல் கொடுத்தார்..."

நிருபர் இளைஞன் அதிர்ந்து போனான்.

10

அந்த நாளின் சாயத்தரம் துங்கபத்ரா அவர்களைச் சந்தித்தபோது - இப்ராஹிம், டேனியல் மற்றும் விநாயக் மூன்று பேரும் சொன்னார்கள்.

"கங்கிராட்ஸ்துங்கபத்ரா....!"

அவள் ஹேண்ட் பேகை மேஜை மீது போட்டு விட்டு அவர்களைப் பார்த்தாள்.

"எதுக்காக இந்த கங்கிராட்ஸ்...?"

"மும்பையில் விபத்து...அரிஜோனா அதிபரை அவர் வழக்கமாப் பயன்படுத்தும் 'ஐ ட்ராப்ஸ்'-க்கு பதிலா பாய்ஸனை மாத்தி வச்சு பயங்கர செக்யூரிட்டிக்கு இடையில் கொலை செஞ்சது...என்று வரிசையாகளங்கள் ஆப்ரேஷன்கள் வெற்றிகரமாகவே நிறைவேறிட்டி ருந்தது... முதன்முதலாகத் தோல்வி ஏற்பட்டது கவர்ண் மாளிகை ஆப்ரேஷன்லதான்...அதில்தான்முதல்முதலாக நீ பங்கெடுத்திருந்தே... அதனால எங்க மேலிடம் உன்னைநிந்திக்கப் போகிறதுன்னுநினைச்சிருந்தோம்... ஆனா உன்னோட நடவடிக்கைகள் அத்தனையையும் பரிசீலித்துப் பார்த்துட்டு மேலிடம் உன்னை பயங்கரமாய்ப்பாராட்டியிருக்கு..."

துங்கபத்ரா புன்னகைத்தாள்.

"என்னைமுழுசாய்ப்புரிஞ்சுக்கிட்டதற்கு தேங்க்ஸ்ஏ லாட்! கவர்னர் மாளிகை ஆப்ரேஷன் தோல்வி அடைந்ததற்கு முழுக்க உங்களின் அஜாக்கிரதைதான் காரணம்..."

"என்னசொல்றேதுங்கபத்ரா...."

"ஆமா... உங்களுக்குக் கீழே வேலை செய்யற அத்தனை பேரையும் நீங்க முழுசா நம்பினது தப்பு.... அதைப் பயன்படுத்தித்தான் கிரீஷ் ஒரு அருமையான திட்டத்தைப்பாழ்-படுத்தினான்...."

"அப்படித்தான் மேலிடமும் எங்களைக் குற்றம் சாட்டியிருக்கு....அடுத்தகட்டநடவடிக்கையைமுழுக்க முழுக்க உன் தலைமையில் நடத்தணும்ன்னு சொல்லியிருக்காங்க..."

"நானேஉங்ககிட்டே சொல்லலாம்ன்னுஇருந்தேன்... அடுத்த அசைன்மென்ட் என்னங்கறதை மட்டும் சொல்லுங்க... டாப் டு பாட்டம் நான் செயல் திட்டம் வகுத்துக் கொடுக்கிறேன்... இந்த ஆப்ரேஷன் மட்டும் ஃபெயிலியர் ஆச்சுன்னா அதுக்கு முழுக்கமுழுக்க நான் மட்டுமே பொறுப்பு ஏத்துக்கறேன்..."

விநாயக் புன்னகைத்தான்.

"உன்னோடதைரியத்துக்குஎன்னோடபாராட்டுக்கள் துங்கபத்ரா... ஆனா அடுத்து நாம நடத்த வேண்டிய ஆப்ரேஷன்நீநினைக்கிறஅளவுக்கு கலபம் இல்லை..."

"ஆப்ரேஷன்என்ன...?அதைமட்டும் சொல்லுங்க..."

"டெல்லில நம்ம கைங்கர்யத்தைக் காட்டப் போறோம்...."

"எப்படி...?"

"பார்லிமென்ட்டில் ஒரு அதிரடித் தாக்குதல் நடத்தணும்... நல்லது செய்யறதுக்காக தேர்ந்தெடுத்து அனுப்பினா...அதைச் செய்யாமவெட்டிக்கூச்சல்போட்டு இந்த நாடு பாழாயிட்டிருக்கிறதுக்கு முதல் காரணமா இருக்கும்எம்பிக்களில்குறைஞ்சதுபத்துப்பேரையாச்சும் பாராளுமன்ற வளாகத்துக்குள்ளேயே சாகடிச்சுக் காட்டணும்..."

துங்கபத்ரா அமைதியாய் அவன் சொன்னதை மனசுக்குள் அசை போட்டுக் கொண்டிருக்க -

விநாயக் கேலியாய்ச் சிரித்தான்.

"என்னதுங்கபத்ரா...மலைச்சுப் போய்ட்டியா...?"

அவள் சட்டெனநிமிர்ந்தாள்.

"நோ...நோ... நான் கேக்கப் போற கேள்விக்கு உங்களாலசரியானபதிலைச் சொல்லமுடியுமா...?"

"கேளு..."

"ஏகே 47... அல்லது... ஏகே 56 ரகத் துப்பாக்கியைக் கையாளப் பழகிக்க எத்தனைநாளாகும்...?"

"எதுக்காக இந்தக் கேள்வியைக் கேக்கறே...?"

"எனக்குத் தேவை சரியான பதில்..."

"இதெல்லாம் நவீன ரகத் துப்பாக்கிகள்... ஒரு 'நான் ஸ்கில்டு' ஆள் கூட கலபமா உபயோகிக்கக் கூடிய துப்பாக்கி வகைகள்... இலங்கையில் எட்டு வயசுப் பையனும்... பத்து வயசுப் பையனும் இந்தத் துப்பாக்கியைப் பயன்படுத்திட்டிருக்கான்..."

"ஸோ... வித் இன் ஏ வீக் டைம் என்னால பழகிட முடியும்... அப்படித்தானே...?"

"ஆமா...! நீ இந்த நவீன ரகத் துப்பாக்கியால கூடப் பழகப் போறியா...? எதுக்கு...?"

"இன்னும் நான் என்னோட கேள்விகளை முடிக்கலை.... நான் கேள்விகளை முடிக்கிற வரைக்கும் உங்ககிட்டே இருந்து பதில்களை மட்டும்தான் எதிர்பார்க்கிறேன்... கேள்விகளை இல்லை..."

"சரி... உன்னோட அடுத்த கேள்வியைக் கேளு...."

"இந்த நவீன ரக இயந்திரத் துப்பாக்கியைப் பயன்படுத்தி ஒரு ரவுண்டில் எத்தனை பேரைச் சுட முடியும்...?"

"நீ எதுக்காக இந்த விபரமெல்லாம் கேக்கறேன்னு புரியல்லை..."

"ஒரு நூறு பேரைச் சுட முடியுமா...?"

"முடியும்ன்னா நீ என்ன செய்யப் போறே...? முடியாதுன்னா நீ என்ன செய்யப் போறே...?"

"முடியும்ன்னா... பாராளுமன்ற வளாகத்துக்குள் வெச்சு... பத்துப் பேர் அல்ல... நூத்துக் கணக்கான பேரை நம்பிக்கையை நான் கூட்டுத் தள்ள முடியும்..."

"துங்கபத்ரா...! ஆர் யூ ஜோக்கிங்...?"

"சீரியசான நேரத்தில் எனக்கு ஜோக் அடிச்சுப் பழக்கம் இல்லை..."

"எப்படி இது சாத்தியம்...?"

"நான் கேக்கற உதவிகளை மட்டும் எனக்கு செய்யுங்க... இதை சாத்தியமாக்கிக் காட்டறேன்... அது மட்டுமல்ல... இந்தக் காரியத்தை செஞ்சுட்டு எந்த சேதாரமும் இல்லாம நான் தப்பிச்சு வரவும் முடியும்..."

"எங்களால நம்ப முடியலை..."

"சில விஷயங்களை செஞ்சுக் காட்டினா பின்னாலதான்

நம்ப முடியும்..."

"அப்படி இல்லை... முடியுமா முடியாதாங்கிறதுக்கான சாத்தியக் கூறுகள் முன்கூட்டியே நிச்சயம் தெரியுமே...."

"இது எப்படி சாத்தியம்ன்னு கொஞ்சமாவது தெரிஞ்சுக்கவிரும்பறிங்க... அப்படித்தானே...?

"ஆமா..."

"வர்ற மாசம் பதினஞ்சாம் தேதி இது சாத்தியமாகும்...."

"அன்னிக்கு என்ன ஸ்பெஷல்லிட்டி...?"

"அடுத்து வரப் போற தேர்தலுக்கு முந்தி நடக்கும் பாராளுமன்றக் கூட்டத் தொடரின் கடைசி தினம்தான் வர்ற பதினஞ்சாம் தேதி...."

"அதுக்கும் நம்ம திட்டத்துக்கும் என்ன தொடர்பு...?"

"வழக்கமா... கூட்டத் தொடரின் கடைசி தினத் தன்னிக்கு எல்லாளம்பிக்களும் பிரதமர் மற்றும் ஜனாதிபதி யோட பார்லிமென்ட் ஹவுசின் புல்வெளியில் நின்னுக்கூப் போட்டோ எடுத்துப்பாங்க...."

இப்ராஹிம்...

டேனியல்...

விநாயக்...

மூன்று பேரும் சட்டென்று ஆச்சர்யத்தோடு அவளை நிமிர்ந்து பார்த்தார்கள்.

"உன்னோட திட்டம் இப்ப எங்களுக்குப் புரியுது துங்கபத்ரா... அப்படி அவங்களுக்குப் போட்டோவுக்கு போஸ் குடுத்து வரிசையா நிக்கறப்போ அவங்களை குருவியைச் சுடற மாதிரி சுட்டுத் தள்ளச் சொல்றே...?"

"சுட்டுத் தள்ளச் சொல்லலை... சுட்டுத் தள்ளப் போறேன்..."

"துங்கபத்ரா... உன்னால முடியுமா...?"

"என்னாலதான் முடியும்... இந்த விஷயத்தில் யாரையும் நான் நம்பத் தயாரா இல்லை.... என்னோட மூவ்மெண்ட்ஸ் ரொம்ப சீக்ரட்டா இருக்கப் போகிறது... நான் கேக்கற உதவிகளை மட்டும் செய்யுங்க... ஆப்ரேஷனை சக்ஸஸ்ஃபுல்லா நடத்திக் காமிக்கற பொறுப்பை நான் ஏத்துக்கறேன்..."

தீர்க்கமான குரலில் சொன்னாள் துங்கபத்ரா.

காலேஜ்

துங்கபத்ரா புத்தகங்களை மார்பில் அணைத்தபடி கிளாஸ் ரூம் இருந்த வராந்தா படிகளில் உயர்ந்த போது - பின்பக்கமிருந்து சத்தம் கேட்டது.

"ஏய்துங்கா...!"

யுவனின்குரல்.

திரும்பிப் பார்த்தாள் துங்கபத்ரா.

நெருங்கி வந்து அவள் கன்னத்தை இடித்தாள்.

"ஒரு குட்மார்னிங் கிடையாதா...? ஒரு புன்னகை கிடையாதா...? என்ன இது வறட்டுப் பார்வை...?"

"காலங்கார்த்தால உன்மூஞ்சில முழிச்சிட்டேனேன்னு நான்யோசிச்சிட்டிருக்கேன்..."

"என்னோட முகராசி பத்தி உனக்குத் தெரியாது... ஒரு நல்ல செய்தியோட நான்வந்திருக்கேன்... தெரியுமா...?"

துங்கபத்ரா அவனை ஏறிட்டாள்.

"நல்ல செய்தியா...? என்னது...?"

"அதைச் சொல்றதுக்கு முன்னால ஒரு கேள்வி..."

"என்னகேள்வி...?"

"உன்னைநான்நேத்துலர்ந்துவலைவீசித்தேடிட்டிருக் கேன்... நீ நேத்து காலேஜ்க்கேவரலை போலிருக்கு...?"

"ஆமா... லீவ் போட்டுட்டேன்..."

"எதுக்கு திடீர்ன்னு லீவ்...?"

"எனக்கு வேலை இருந்தது..."

"துங்கா...! உன்னோட நடவடிக்கையெல்லாம் ரொம்பப் புதிரா இருக்கு... இந்தவாரத்தில்மட்டும் நீமூணுநாள்லீவ் எடுத்துட்டே..."

"ப்ரின்சிபாலே அதைப் பத்தியெல்லாம் கவலைப் படலை... லீவ் லெட்டரை நீட்டினேன்... என்மேல உள்ள நம்பிக்கையில்கையெழுத்தைப் போட்டுட்டார்..."

"நான்அப்படிக்கவலைப்படாம இருக்கமுடியாது...."

"ஏன்...?"

"என்னா நான் நாளைக்கு உன்னோட லைஃப் பார்ட்னராஆகப் போகிறவன்..."

துங்கபத்ரா உதட்டைச் சுழித்தாள்.

"என்னடா... இப்ப இருந்தே மேல் டாமினேஷனா...? என்கிட்டே இந்த வேலையெல்லாம் நடக்காது... நீளங்கே

போறே என்ன பண்றேன்னு என்னிக்காச்சும் நான் கேட்டிருக்கேனா...?"

"போச்சுடா... லேசா மிரட்டிப் பாக்கலாம்ன்னு நினைச்சா நடக்காதே... எனக்கு மேல நீ டா போட்டுக் கத்த ஆரம்பிச்சிடுவியே...?"

"சரி அதை விடு... எனக்கு என்னவோ நல்ல செய்தி கொண்டு வந்திருக்கேன்னு சொன்னியே... என்ன செய்தி...?"

"அன்னிக்கு நடந்த இன்ட்டர்காலேஜ் காம்ப் பட்டீஷனில்நீதான்ஜெயிச்சிருக்கேதுங்கபத்ரா... தமிழக அளவில் உன்னை சிறந்த பேச்சாளரா தேர்ந்தெடுத் திருக்காங்க..."

துங்கபத்ரா உதடுகளுக்குள்முணுமுணுத்தாள்.

"என்னைவேற ஒருபக்கம் சிறந்த செயல் வீராங்கனை யாவும் தேர்ந்தெடுத்திருக்காங்க... இந்த ஃபூலுக்கு அது தெரியாது..."

"என்னசொன்னேதுங்கபத்ரா...?"

"ஒண்ணுமில்லை..."

"என்னமோ ஃபூல்ன்னு காதில் விழுந்ததே...? என்னைத்தானேதிட்டினே...?"

"சேச்சே.... என் ராஜா... உன்னை ஏன் நான் திட்டப் போறேன்...!"

"அப்படின்னாநான்மேல சொல்லலாமா...?"

"சொல்லு...."

"இப்படி மாநில அளவில் தேர்வு பெற்ற மாணவ மாணவிகளை டெல்லிக்குக் கூப்பிட்டு நேஷனல் லெவல்லகாம்ப்பட்டீஷன்நடத்தப் போறாங்க... அதிலே வெற்றி பெறுகிறவங்களுக்கு இந்திய ஜனாதிபதி கையாலே பரிசு கிடைக்கும்...."

துங்கபத்ராநிமிர்ந்தாள்.

"நேஷனல் லெவல் காம்ப்பட்டீஷன் எங்கே நடக்கிறதுன்னு சொன்னே...?"

"டெல்லில..."

"என்னிக்குப் போகணும்...?"

"பனிரெண்டாம் தேதி நீ டெல்லியில் இருக்கணும்..."

"வதியாப் போச்சு...."

"எதுக்கு வசதியாப் போச்சுன்னு சொல்றே துங்கா...?"

"ம்... ஒண்ணுமில்லை..."

மறுத்தலாய்த் தலையசைத்தாள்.

11

டெல்லி.

அந்த ஹோட்டல் அறையில் டெலிபோனில் எஸ்டீடீ பேசிக் கொண்டிருந்தாள் துங்கபத்ரா.

"ஆமா... காலைலதான் வந்து சேர்ந்தேன்.."

"....."

"ஹோட்டல்ரூமெல்லாம் வசதியாகத்தான் இருக்கு..."

"....."

"அதைப் பத்தியெல்லாம் நீ ஒண்ணும் கவலைப்பட வேண்டாம்..."

"....."

"பேச்சுப் போட்டி பதினஞ்சாம் தேதிசாயந்தரம்..."

"....."

"ஓல்கே வெச்சுடவா...?"

ரிசீவரைச் சாத்திய துங்கபத்ராவிடம் டேனியல் கேட்டான்.

"போன்லயாருதுங்கபத்ரா...?"

அவள்புன்னகைத்தாள்.

"என்னோடபாய்ஃப்ரெண்ட்யுவன்..."

"ஃப்ரெண்டா... லவ்வரா...?"

"லவ்வராத்தான் இருந்தான்... இப்பபாய்ஃப்ரெண்ட் ஆயிட்டான்..."

"புரியலையே...?"

"ஒரு மாசம் முன்னாடி வரைக்கும் நான் அவனை தீவிரமா லவ் பண்ணினேன்... அவனைக் கல்யாணம் பண்ணிக்கிட்டுஒண்ணோ... ரெண்டோகுழந்தையைப் பெத்துக்கிட்டு செட்டில் ஆயிடணும்ன்னு கனவு கண்டுட்டு இருந்தேன்... இந்த ஆக்ட்டிவிட்டில இறங்கினதுக்கப்புறம் அந்தமாதிரி கனவுகளை எல்லாம் வளர்த்துக்க முடியுமா...? அதனாலதான் லவ்வர் ஸ்தானத்தில் இருந்த யுவனை பாய் ஃப்ரெண்ட்

ஸ்தானத்துக்குடீப்ரொமோட் பண்ணிட்டேன்..."

இப்ராஹிம் அவளை ஆச்சர்யமாய்ப் பார்த்தான்.

"உனக்குடஃப் ஹார்ட் இருக்கு துங்கபத்ரா..."

"அப்படி இருந்தால்தானே...தைரியமா மெஷின் கண்ணைப் பிடிக்கமுடியும்...?"

கண்சிமிட்டியவள் - தொடர்ந்து விநாயக்கைப் பார்த்துக் கேட்டாள்.

"விநாயக்...! நான் உன்கிட்டே ஒரு காரியத்தை ஒப்படைச்சிருந்தேனே... செய்துட்டியா...?"

"ஐடி கார்டுதானே...?"

"ஆமா..."

"ரெடி..."

சொல்லிக் கொண்டே அந்த அடையாள அட்டையை அவளிடம் நீட்டினான்.

"இந்தஐடி கார்டுஎதுக்காகதுங்கபத்ரா...? இதை வெச்ச நீபார்லிமெண்ட்டுக்குள்நுழையப் போறியா...?"

"ம்ஹூம்... இந்த கார்டை வெச்ச எம்பிக்கள் கிட்டேயெல்லாம் போகமுடியாது..."

"அப்படின்னாஎம்பிக்களைநீஎப்படி நெருங்குவே...? இந்த கார்டு எதுக்காக...?"

"இப்போஎன்னோடவந்தின்னாஉன்னோடரெண்டு கேள்விகளுக்கும் விடை கிடைக்கும்..."

விநாயக்அவளுடன்கிளம்பத்தயாரானான்.

ஹோட்டலின் க்ரவுண்ட் ஃப்ளோருக்கு வந்து - ஏற்பாடு செய்யப்பட்ட காரில்நிரம்பினார்கள்.

ஸ்டியரிங்பிடித்திருந்த விநாயக் கேட்டான்.

"எங்கேபோகணும்...?"

"நான்சொல்ற வழியில்போவிநாயக்..."

ஸ்வெட்டர் பொத்தானை இறுக்கிக் கொண்டே துங்கபத்ரா சொல்ல - பனிபடர்ந்த டெல்லிசாலைகளை விழுங்க ஆரம்பித்தது கார்.

துங்கபத்ரா நிறுத்தச் சொன்னதைத் தொடர்ந்து - அந்த அரசாங்கக் கட்டிடத்தின் முன்னால் தன் இயக்கத்தை நிறுத்திக்கொண்டது.

"ஏதோகவர்மெண்ட் ஆபீஸ் மாதிரி இருக்கே...?"

"கவர்மெண்ட் ஆபீஸ்தான்விநாயக்..."

"என்ன ஆபீஸ்...?"

"கார்ப்பொரேஷன்ரெக்கார்ட்ரூம்..."

"இங்கே எதுக்காக வந்திருக்கோம்...?"

"பார்த்துக்கிட்டே இரு..."

உள்ளேசென்றவர்களை-தூசியில்தும்மிக்கொண்டே ஒருசிப்பந்திஎதிர்கொண்டான்.

"என்னவேணும்...?"

துங்கபத்ரா அவனிடம் ஐடி கார்டை நீட்டினாள்.

"பார்லிமென்ட் ப்ளானிங் செக்ஷனிலிருந்து வர்றேன்..."

அவன்ஒப்புக்குகார்டைப்பார்த்தான்.

அவனுடைய கண்கள் துங்கபத்ராவையே 'ஜொள் பார்வை' பார்த்துக்கொண்டிருந்தது.

வழிசலாய்ப்புன்னகைத்தான்.

"உங்களுக்குஎன்னவேணும்சொல்லுங்க..."

"ஒருஓல்ட் ரெக்கார்ட் தேவைப்படுது..."

"என்னரெக்கார்டு...?"

"பார்லிமென்ட் கட்டிடத்தில் சில முக்கியமான இடங்களை ஆல்ட்ரேஷன் பண்ணச் சொல்லி ஆர்டர் பாசாகிஇருக்கு...பழையப்ளான்வேணும்...அதைரெஃபர் பண்ணிட்டுத்தான் பில்டிங்கில் கை வெக்கவே முடியும்..."

"நான்எடுத்துத்தர்றேன்...!உங்கபேர்என்ன...?"

"ஐடி கார்டில் போட்டிருக்கு பாருங்க... என் பேர் ஷாலினி..."

"ஹி...ஹி...நான்கார்டைசரியாப்பார்க்கலை...உங்க ஆபீசிலிருந்து இதுக்கு முன்னாடி ஒரு குரங்கு மூஞ்சி ஆள்தானேவருவான்...?"

"அவருக்கு பதிலா நான் ட்ரான்ஸ்பர் ஆகிவந்திருக் கேன்..."

"இனிமே நீங்களே வாங்க... ஸார் யாரு...?" என்றபடி விநாயக்கைவேண்டாவெறுப்பாய்ப்பார்த்தான்.

"இவர்என்ஃப்ரெண்ட்....துணைக்குவந்திருக்கார்..."

"நானும்கூட ஹஸ்பெண்டோன்னு நினைச்

சிட்டேன்... உங்களுக்கு இன்னும் கல்யாணம் ஆகலையே...?"

"ஸார்...! அந்த ப்ளானோட காப்பி எனக்கு அவசரமா வேணும்..."

"இதோ எடுத்துத் தர்றேன்... ரெக்கார்டுகளோட ரெக்கார்டா உக்காந்து தும்மித் தும்மி சலிச்சுப் போயிடுச் சுங்க... அதனாலதான் உங்களை மாதிரியாராவது வந்தா கொஞ்ச நேரம் பேசி திருப்திப் பட்டுக்கறது..."

ரொம்பவும் கவலையானதொனியில்சொல்லிவிட்டு-உயரமானகப்போர்டுகளுக்குள்மறைந்தான்.

கட்டுக்கள் பிரிபடும் சப்தம் கேட்டது.

சற்று நேரத்தில் அந்தப் பழுப்பான காகித மடிப்பை எடுத்துக்கொண்டுவந்தான்.

"அந்த லெட்ஜர்ல கையெழுத்தைப் போட்டுட்டு இதைக்கொண்டுபோங்க..."

"தேங்க்ஸ்...."

துங்கபத்ரா பால்பாயிண்ட் பேனாவை லெட்ஜரில் ஒட்டிவிட்டு-அதைவாங்கிக்கொண்டாள்.

மீண்டும்காருக்குள்வந்தபோது-விநாயக்கேட்டான்.

"துங்கபத்ரா...! இந்த பார்லிமென்ட் மேப்பை என்ன பண்ணப்போறே...?"

கார் சீட்டின் மேல் அந்த மேப் காகிதத்தை விரித்து வைத்தவள்பேனாவினால்அந்தஇடத்தைமார்க்செய்து காண்பித்தாள்.

"என்னோடதிட்டத்தோட உயிர்இங்கேதான்இருக்கு விநாயக்..."

"என்னஇது...?"

"உபயோகத்தில் இல்லாத பாதாள சாக்கடை...! பார்லிமென்ட் ஹவுசில் போட்டோ எடுக்கப்படும் புல்தரைகிட்டே ஒரு மேன் ஹோல் இருக்கு பாரு..."

"ஆமா..."

"இதோ இந்த ரிங் ரோட்டில் இருக்கிற மேன் ஹோலுக்குள்ளே நுழைஞ்சா பார்லிமென்ட் ஹவுஸ் புல் தரையிலிருக்கும் மேன்ஹோலுக்கு கலபமா வந்து சேர்ந்துடலாம்...இதிலிருந்து வெளிப்பட்டுஎம்பிக்களை முடிஞ்சவரைக்கும் சிலரவுண்டுகள் ஷிட் பண்ணிட்டு

இதே மேன் ஹோல் வழியாத்தப்பிச்டுவென்..."

"பார்லிமென்ட் செக்யூரிட்டி பீப்பின்ஸ் மேன் ஹோல்சை அலாக்கிரதையாவிட்டு வெப்பாங்களா...?"

"பூமக்கத்தில் இருக்கும் மேன்ஹோல்ஸை செக்யூரிட்டிக்கு உட்படுத்தியிருப்பாங்க... ஆனா இது எப்பவோ மூடப்பட்டபாதாளசாக்கடை... இந்த மேன்ஹோல்ஸ்கூட வெளியே தெரியாதபடி மூடப்பட்டிருக்கும்... மேன் ஹோல் இருக்கும் இடத்தை லொகேட் பண்ணி அதைத் திறக்கணும்..."

"க்ரூப் போட்டோ எடுக்கப் போற எம்பிக்களைக்ரூப் மாடர் பன்ன உன்னால முடியும்ன்னு இப்ப எனக்கு முழுசா நம்பிக்கை வந்திருக்கு துங்கபத்ரா..."

சந்தோஷம் தாங்கப் சொன்னான் விநாயக்.

12

பதினைந்தாம் தேதி காலையில் எம்பிக்கள் எல்லோரும் க்ரூப் போட்டோவுக்குத் தயாராகி நின்று கொண்டிருந்தபோது - துங்கபத்ரா ஜெர்கின் உடைக்குள் மறைத்து வைத்த ஏகே 56 ரகத் துப்பாக்கியோடு - ரிங் ரோட்டில் இருந்த அந்த மேன் ஹோலுக்குள் சட்டென உள்ளே புகுந்தான்.

13

டொக்...

டொக்...

டொக்...

ஹோட்டல் ரூம் கதவு தட்டப்பட்டது.

டேனியல் கதவைத் திறந்து எட்டிப்பார்த்தான்.

அவனை சட்டென்று நெட்டித் தள்ளிவிட்டு ஒரு கனமான உருவம் உள்ளே புகுந்தது.

"ஏய்...ஹூ இஸ் யூ...?"

அவன் கத்திய போது -

கதவின் இரண்டு பக்கமும் வரிசையாக 'தப் தப்' பென்று ஷூ கால்கள் தடதடக்க டெல்லி போலீசார் அறை முழுவதும் ரவுண்ட் அப் செய்து துப்பாக்கிகளோடு நின்றார்கள்.

மையமாய் வந்த இன்ஸ்பெக்டர் அங்கிருந்த இப்ராஹிம், டேனியல், விநாயக் மூன்று பேரையும் பார்த்துக்குரல் கொடுத்தார்.

"யாரும் அசையாதீங்க... அசைஞ்சிங்கன்னா உடம்பு சல்லடையாயிடும்..."

"இன்ஸ்பெக்டர்...! எங்களை எதுக்காக ரவுண்ட் அப் பண்ணியிருக்கிங்க...?"

"அந்த விபரமெல்லாம் மாமியார் வீட்டுக்குக் கூட்டிட்டுப் போய்ட்டு சொல்றோம்... உங்களை மட்டுமில்லைடா... இந்தியாவுக்குள் எங்கெங்கெல்லாம் உங்க ஆட்கள் இருக்காங்களோ... அங்கேயெல்லாம் ரவுண்ட் அப் பண்ணியாச்க... இந்தியாவுக்குள்ளே மட்டுமில்லை... ஃபாரின்ல இருந்து உங்களை ஆட்டுவிக்கிறாங்களே... அவங்களையும் ரவுண்ட் அப் பண்ணியாச்க... ஒரே ஒருத்தான் இன்னும் மாட்டலை..."

அவர் சொல்ல -

அந்த இக்கட்டான நிலையிலும் அவர்கள் மூன்று பேர்க்குள்ளும் புன்னகை அரும்பியது.

'துங்கபத்ரா அவ்வளவு கலபத்தில் மாட்டிக் கொள்ள மாட்டாள்.'

14

ஜனாதிபதியும், பிரதமரும் வந்து சேர்ந்திருந்தார்கள்.

அந்த பிரம்மாண்டமான க்ரூப்பை ஒழுங்குபடுத்தி நிற்க வைக்க படாதபாடு பட்டார் அந்தப்ரொஃபஷனல் போட்டோக்ராஃபர்.

நீண்ட நேரத்தினாறலுக்குப் பின் எல்லோரும் சரியாய் நிற்க வைக்கப்பட்டார்கள்.

க்ளிக் செய்ய இருந்த அந்த மிகக் கடைசி நேரத்தில் - கேமராவுக்கும் க்ரூப்புக்கும் நடுவிலிருந்த தரை பிளந்து மேன் ஹோல் மூடி குபீரென்று மேலே திறந்தது.

அதிலிருந்து ஏகே 56 துப்பாக்கியோடு துங்கபத்ரா புயலாய் வெளிப்பட்டாள்.

அவள் வந்ததுமே -

ராஷ்ட்ரபதி -

பிரதமரில் ஆரம்பித்து -

அத்தனை எம்பிக்களுமே -

சொல்லி வைத்த மாதிரி கை தட்ட ஆரம்பித்தார்கள்.

தப்...

தப்...

தப்...

ஒரு ஆளுயர மாலையை ஒரு பார்லிமென்ட் சிப்பந்தி கொண்டு வர ராஷ்ட்ரபதி துங்கபத்ராவுக்கு அதைப் போட்டார்.

"போட்டோக்ராபர்! இந்த வீராங்கனையோட சேர்த்து இப்ப போட்டோ எடுங்க..."

துங்கபத்ரா சந்தோஷக் கண்ணீரோடு கேட்டாள்.

"ஸார்...! அவங்களையெல்லாம்...?"

"கொஞ்சம் முன்னாலதான் தகவல் வந்தது... நீ சொன்ன தகவல்களின் அடிப்படையில் ஒரே நேரத்தில் அவங்க அத்தனை பேரையும் மடக்கிட்டோம்... இந்த நிமிஷத்திலிருந்து தேச விரோதிங்கற உன்னோட வேஷத்தைக் கலைச்சிடலாம்..."

15

சென்னை.

யுவன் இன்னமும் ஆச்சர்யம் விலகாத பார்வையில் அவளைப் பார்த்தான்.

"துங்கா...! எனக்கு ஒண்ணுமே புரியலை... நீ தீவிரவாதியா இருந்தியா...?"

"அதெல்லாம் ஒரு நாடகம்..."

"என்ன நாடகம்...?"

"அரசாங்கம் போட்ட நாடகம்..."

"உன்னைத் தீவிரவாதியா நடிக்கச் சொன்னாங்களா...?"

"ம்ஹூம்... பேச்சுப் போட்டிங்கற பேர்ல தீவிரவாதிகளுக்கு ஒரு வலை விரிச்சாங்க... அதிலே அவங்க வந்து மாட்டிக்கிட்டாங்க..."

"பேச்சுப் போட்டியே நாடகமா...?"

"ஆமா... புள்ளி விபரங்கள் சேகரிக்கற அமெரிக்கக் கம்பெனி இந்தப் பேச்சுப் போட்டியை நடத்தறதா அறிவிச்சது... உண்மையில் அந்தக் கம்பெனியின் நோக்கம் அதுவல்ல..."

"பின்னே...?"

"இந்தியாவை நேசிக்கிறேன்... வெறுக்கிறேன்னுகற நீதியில் தலைப்பு கொடுத்து தீவிரவாதிகளைக் கண்டு பிடிக்கிறதில் நம்ம அரசாங்கத்துக்கு உதவறதுக்காகத் தான் அந்தக் கம்பெனி பேச்சுப் போட்டியை நடத்திச்சு... நம்ம நாட்டுக்கு தலைக் குனிவை ஏற்படுத்தற காரியங்களில் இறங்கியிருக்கும்பலைக் கண்டுபிடிக்க முடியாம தினறிய இந்திய அரசாங்கத்துக்கு அந்த அமெரிக்கநிறுவனம் இந்த யோசனையைக் கொடுத்தது... இந்தியாவை வெறுக்கிறேன்னு கல்லூரிமட்டத்தில் ஆவேசமா பேசறவங்களை தீவிரவாதிகள் அணுகறதுக்கு வாய்ப்பிருக்குன்னு கணக்குப் போட்டாங்க... அந்தக் கணக்கு சரியாகவே இருந்தது... என்னை அணுகினாங்க... அப்பவே விநாயக், இப்ராஹிம், டேனியல் எல்லோரையும் பிடிக்க நினைச்சாங்க... ஆனா நான்தான் துணிச்சலா ஒரு முடிவைச் சொன்னேன்... கூண்டோட பிடிக்கணும்... இவங்க சதித்திட்டத்தில் நானும் பங்கெடுத்துக்கறமாதிரி நடிக்கிறேன்னு சொன்னேன்... அரசாங்கம் எனக்கு அதுக்கான அனுமதியைக் கொடுத்தது... கவர்ன்மாளிகை ஆப்ரேஷனை முன் கூட்டியே போலீசுக்கு தகவல் கொடுத்து தடுத்ததே நான்தான்... ஆனா போலீசின் உதவியோட மிமிக்ரி கேஸட் ஒண்ணு தயார் பண்ணி அந்தப் பழியை அவங்க ஆட்களில் ஒருத்தனான கிரீஷ் மேல போட்டேன்... எதேச்சையா பைக்கில் ஹெல்மெட்டோட போன ஒரு ஆளையும் இந்த நாடகத்தில் பயன்படுத்திக்கிட்டேன்... அவங்க கூட்டத்தோட கூட்டமாறுக்கியமாகி... படிப்படியா அவங்க எல்லோரோட வேர்களையும் கண்டுபிடிச்சிட்டு மொத்தமா அவங்களை வளைச்சுப்பிடிக்க உதவினேன்... மொத்தமா எல்லோரையும் வளைச்சுப்பிடிக்கிறவரைஎன் மேல யார்க்கும் சந்தேகம் வந்துரக்கூடாதுங்கறதுக்காக டெல்லி போலீஸ் அவங்களை மடக்கின பின்பும் கூட என்னையும் சேர்த்துத் தேடற மாதிரி நடிச்சாங்க..."

"ஜனாதிபதி உனக்கு விருது கொடுக்கறப்போ நீ பேசின ஸ்பீச் பிரம்மாதமா இருந்ததாமே...? கரெக்ட்டா அந்த நேரம் பார்த்து பவர்கட்... என்ன பேசினேதுங்கா...?"

"இந்த சதியில் பங்கெடுத்துக்கிட்ட முக்கியமான தீவிரவாதிகள் மூணு பேர் விநாயக், இப்ராஹிம்,

இனியல்...! நாட்டுக்கு கெட்டது பண்றதுக்காக இந்து, முஸ்லீம், கிறிஸ்தவர்களான இவங்க மூணு பேரும் ஒத்துமையாக் கூடியிருக்காங்க... இப்படி ஜாதி மத வேறுபாடு இல்லாம நாட்டுக்கு நல்லது பண்றதுக்காக எல்லா மதத்தினரும் ஒன்னுகூடினா எவ்வளவு நல்லா இருக்கும்...? அப்படி ஒன்னு [illegible]ணும்... கூடுவாங்க... அன்னிக்கு இந்தியாவைஎந்தக் கொம்பனாலும் அசைக்க முடியாதுன்னு பேசினேன்..."

"ஜெய்ஹிந்த்..."

என்று சல்யூட் அடித்துவிட்டு - அவளை முத்தமிட முயன்றான் யுவன்.

"டேய்... சமாந்தகா...!" யுவனைப் பிடித்துத் தள்ளிவிட்டுசிரித்தாள்துங்கபத்ரா.

முற்றும்

க்ரைம் நாவல் சந்தா விபரம்
ஓர் ஆண்டுச் சந்தா : ரூ.60.00
அரை ஆண்டுச் சந்தா: ரூ.30.00

தீபம் பப்ளிகேஷன்ஸ்-க்காக தீபம் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் வெளியிடுபவர் மற்றும் உரிமையாளர் ஜி.அசோகன்.
முகவரி: 333, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை - 5.
ஆசிரியர்: ஜி.அசோகன். தொலைபேசி: 8571520, 8544294